289

KHADDAR MALAR. APRIL. 1951.

கதர் மலர்

மலர் 4. இதழ் 7.

20 APR 1951
MADRAS

தமிழ் நாட்டு சர்க்கா சங்கம், வெளியிடும் மாதாந்திர பத்திரிகை.



★

A. I. S. A.
கதர் மலர்
&
ஸர்வோதய
பிரசுராலயம்,

★

ஏப்ரல்
1951

★

விலை அணா 4.
வருட சந்தா ரூ. 3.

★

பொருளடக்கம். ★ தொடர் நெ. 43.

ஊழியர்களுக்கு அழைப்பு	209
எந்தபாஷையில் போதிப்பது?	214
மகாதேவ் தேசாயின் இறுதி நான்கு நாட்கள்	217
புரட்சி சுலபமாக ஏற்படுவதில்லை	220
உழைப்பு தேவதையை உபாசனை செய்வோம்	222
கிராம ஸ்வராஜ்யத்திற்கு அஹிம்சா புரட்சி	225
சுயதேவைக்கு பருத்தி பிரச்னை	230
திடசித்தத்தின் மூர்த்தி—பாபு	231
சென்னை சர்க்காரும் சர்க்கா சங்கமும்	234
கதருக்கு நூல் விதி ஏன்?	235
கதர்மலர்-ஸர்வோதய பிரசுராலயம்	236
கதாயிமண்டல்	237
குறிப்பும் செய்தியும்	239
திருப்பூரில் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி	242
கல்லுப்பட்டியில் கிராம முன்னேற்றம்	243
ஸர்வோதய சம்மேளனத்தின் பிரச்னைகள் அட்டை	2
வினோபாஜியின் ஸர்வோதய யாத்திரை ,,	3
சுயதேவைக் கதர் உற்பத்தி ,,	&
ஸ்ரீ மஜூம்தார் எழுதிய புஸ்தகங்கள்	4
கிராம பஞ்சாயத்து	

ஹைதராபாத் ஸர்வோதய சம்மேளனத்தின் முக்கிய பிரச்னைகள்.

வரும் ஏப்ரல் மாதம் நடக்கும் சர்வோதய சம்மேளனத்தின் முடிவிற்காக கீழ்கண்ட 10 பிரச்னைகளை ஸர்வ சேவா சங்கம் தயாரித்திருக்கிறது.

1. ஸர்வோதய சமுதாயத்தில் பொருளாதார சமத்துவம் என்பதின் தெளிவான பொருள் என்ன? இப்பொழுதுள்ள நிலைமையில் சத்தியம்-அஹிம்சை மூலம் இவ்வித பொருளாதார சமத்துவத்தை எப்படி அடைவது?

2. தேசத்தின் புனருத்தாரணத்திற்காக ஸர்வோதய ஊழியர்கள் தங்களுடைய முழு சக்தியுடன் எப்படி உழைக்கக்கூடும்?

3. இப்பொழுதுள்ள நிலைமையில் தேசத்தின் குணத்தையும் தார்மீக பண்பாட்டையும் உயர்த்துவதற்கு ஸர்வோதய ஊழியர் என்ன செய்யலாம்?

4. காணிக்கை நூல் நிதி திரட்டப் பிரசாரம் செய்யவும் அந்த நூலை உபயோகம் செய்யவும் தகுந்த ஏற்பாடு.

5. வருஷாந்தர சம்மேளனத்தை ஒரே இடத்திலே கூட்டுவதில் அதிக பலனுள்ளதாக இருக்குமா?

6. ஸர்வோதய மேளா தினத்தை 12 உ பிப்ரவரியிலிருந்து ஜனவரி 30 க்கு மாற்றி விடலாமா?

7. சரீர உழைப்பு, வெளவாமை என்ற தத்துவ ஆதாரத்தைக் கொண்டு நம்முடைய ஸ்தாபனங்களை எந்த முறையில் நடத்துவது?

8. ஸர்வோதய லக்ஷியத்தையும் நிர்மாணத் திட்டத்தையும் பரப்ப தேசம் பூராவும் ஒரு யாத்திரைத் திட்டம் தயாரிப்பது பயனுள்ளதா?

9. பல நிர்மாண சங்கங்கள்-ஸ்தாபனங்களிலிருந்து வேலை அறிக்கைகளை சேகரிக்க ஏற்பாடு.

10. வெவ்வேறு நிர்மாண ஸ்தாபனங்களைப் பற்றி அவைகளிலுள்ள குணதோஷங்களை ஆலோசிப்பதும் அவைகளுக்குத் தகுந்த யோசனை கொடுப்பதும்.

கதர்  மலர்

மலர் 4 | ஏப்ரல் 1951. | இதழ் 7

ஊழியர்களுக்கு அழைப்பு.

(ஆச்சார்ய வினோபா பாவே.)

15—10—50-ல மகன்வாடியில் நடந்த தாலுக்கா கதர் அன்பர்கள் மகாநாட்டில் பேசியது.

'விவசாயி' அழைக்கிறான்.

ஒருவருஷ காலமாக நான் யாத்திரையை நிறுத்தி விட்டு பரந்தாமத்தில் வந்து அமர்ந்துகொண்டு இந்தியாவின் கிராம மக்கள் ஆத்ம நிஷ்டர்களாக (தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் உள்ளவர்களாக) ஆவதெப்படி என்பதைக் குறித்து ஆராய்ந்துகொண்டிருக்கிறேன். அவர்களின் சார்பில் சில சோதனைகளும் செய்து வருகிறேன். இந்தச் சோதனைகளைச் செய்யும் பொழுது ஒவ்வொரு நாளும் இது வரையில் பல காரணங்களினால் நம்மால் செய்யப்படாதிருந்த சில காரியங்கள் மிகவும் சாதாரணமானவை என்பதை உணர்ந்து வருகிறேன். நாம் அவைகளைச் செய்ய முடியுமானால் அதிகம் பேசுவதற்கே தேவையிராது. எல்லாக் காரியங்களும் சுலபமாகவே கைகூடி விடும். காந்திஜி நமக்கு அளித்துள்ள போதனைகளுக்கு ஒரு அளவே இல்லை. அவை அனைத்தையும் பின்பற்றுவதென்றால் நமது ஆயுளே போதாது. சமதர்ம சுயம்பூர்த்தி என்பது அவருடைய வேலைத் திட்டத்தில் மிகவும் முக்கியமான ஒரு தத்துவமாகும். ஆனால் பல காரணங்களினால் அதில் இதுவரையில் கவனமே செலுத்த இயலாமல் போயிற்று. ஆகையால் நான் ஒரு விவசாயியாக ஆகிவிடவேண்டுமென்று முடிவு செய்தேன். ஒரு காலத்தில் நான் ஆசிரியனாய் இருந்ததுண்டு. பிறகு சிறிது காலம் நெசவுக்காரனாயிருந்தேன். இடையில் தோட்டிவேலை பார்ப்பதாகவும் பாவனை செய்ததுண்டு. இவ்வாறு பல காரியங்களை ஒன்றின்பின் ஒன்றாக ஏற்ற பிறகு இப்பொழுது விவசாயியாகியிருக்கிறேன். நீங்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். நான் எந்தக் காரியத்தைச் செய்து வந்த போதிலும் அதைப் பற்றி பேசும்படி என்னிடம் சொல்லாதீர்கள். இதற்கு பதிலாக நான் இருக்கும் இடத்திற்கு வந்து நான் செய்துவருவதைப் பாருங்கள். பிறகு கலந்து பேசலாம். பெரிய கூட்டங்களுக்கு வந்து சொற்பொழிவு

ஆற்றுவதற்கு எனக்கு அவகாசம் இல்லாவிட்டாலும் கிராமங்களிலிருந்து விஷயத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று வருகிறவர்களுடன் கலந்து பேசுவதற்குப் போதிய சமயம் அளிக்க முடியும். ஆகையால் உங்களுக்கு நான் இப்பொழுது அழைப்பை அளிக்கிறேன்.

தினமும் புதியதவம்.

நான் இருக்குமிடத்தில் 'தாம்' நதி ஓடுகிறது. வருஷம் பூராவும் ஓடுகிறது. சில சமயங்களில் நான் அதன் கரையில் போய் உட்காருவேன். அப்பொழுது அது என்னுடன் பேசத்தொடங்கும். நான் அதனிடம், "நீ எப்பொழுது முதல் ஓடிக்கொண்டிருக்கிறாய்? எது வரையில் ஓடிக்கொண்டிருப்பாய்? என் ஓடுகிறாய்?" என்று கேட்பதுண்டு. அதற்கு அது "எப்பொழுது முதல் ஓடுகிறேனே தெரியாது. எது வரையில் ஓடிக்கொண்டிருப்பேனென்றும் அறியேன். என் ஓடுகிறேன் என்றும் சொல்லத் தெரியவில்லை. ஓடுகிறேன் என்பது மட்டுமே தெரிகிறது. ஆனால் நீங்கள் ஓடுவதற்குக் காரணமென்ன என்று கேட்டு விட்டதால் சமுத்திரத்தில் கலந்து கொண்டு இருத்தலே என் நோக்கமென்று சொல்லி வைக்கிறேன்" என்று பதில் சொல்லும். நான், "நீ சமுத்திரத்தில் கலந்து எவ்வளவோ காலமாகி விட்டதே" என்று சொல்ல, "நான் எப்பொழுதும் கலந்துகொண்டே இருப்பேன்" என்று அது பதில் சொல்லுகிறது. அதன் நீர் கலகல வென்று ஓடிக்கொண்டே இருக்கிறது. என்றும் ஓடுமென்று அதிலிருந்து வெளியாகிறது. என்றென்றும் புதுமைவாய்ந்த அதன் நீரிலிருந்து அதன் அழியாமை தோன்றியிருக்கிறது. அன்றன்று புதிய நீர் ஓடாதிருக்குமானல் அதன் என்றுமுள்ள தன்மை வெளியாகாது. இத்தகைய புதுமை மனிதனுடைய தனி வாழ்க்கையிலும் சமூக வாழ்விலும் தேவை. "தினமும் புதிய கருத்து, தினமும் புதிய கற்பனை". ஒவ்வொருநாளும் புதிய விழிப்புள்ளதாய் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு மனதை அடக்கிவை என்று துக்காராம் சொல்லுகிறார். இவ்வாறு வாழ்க்கை ஓட்டமுள்ளதாய் விளங்க வேண்டும். இத்தகைய வாழ்க்கையைப் பெற்றுள்ளவன் எப்பொழுதும் ஒரு புதுமையை உணர்வதோடு புதுப் புதுச் சோதனைகள் அவனுடைய வாழ்க்கையில் நிரம்பியிருக்கும். யோகம் ஒன்றாயினும் பிரயோகம் அல்லது பரிசோதனைகள் பல என்பதே வாழ்க்கையின் சூத்திரமாகும். அதை சாதிக்க முடியாத வாழ்க்கை பாழாகும். வாழ்க்கையிலுள்ள ரசம் வறண்டு, கருத்துக்களின் கட்டமும் தளர்ந்துவிடுமானல் மீதம் உள்ளதுதான் என்ன? வெறும் உமியே ஆகையால் பிரதிதினமும் புதிய புதிய தவங்கள் இயற்ற வேண்டும்.

வாழ்க்கையில் ஊக்கம்.

ஒரு காலத்தில் நமது ஊழியர்கள் எவ்வளவோ சேவைகள் செய்தார்கள். ஆனல் அத்துடன் அவர்கள் திருப்தி அடைந்துவிடக் கூடாது. நாம் சிறு பிராயம் முதல் இதுவரையில் இந்த வயற்றில் எவ்வளவோ மணு உணவை வைத்துத் திணித்திருந்தும் இன்று நாம் புதிய உணவு வேண்டுமென்றுதானே சொல்லுகிறோம். எத்தனையோ சாப்பிட்டாய்விட்டது. ஆகையால் இனி சாப்பாடு தேவையில்லையென்று சொல்வதில்லையே என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நான் இதைத்தான் வாழ்க்கையில் ஊக்கம் என்று சொல்லுகிறேன்.

சுற்றுக.

சில சமயங்களில், "இவ்வளவு வயதான பிறகு நாங்கள் எப்படி மாற முடியும்?" என்று சிலர் கேட்பது காதில் விழுகிறது. வயது ஆகிவிட்டால் வாழ்வின் போக்கை மாற்றவே முடியாதென்று நாம் கருதுகிறோம். தர்ம சாஸ்திரங்களோ இதற்கு நேர்மாறான விஷயத்தைக் கூறுகின்றன. அவைகள் வகுத்துள்ள திட்டம் எப்பொழுதும் வாழ்க்கையை மாற்றிக்கொண்டேயிருப்பதை நோக்கமாகக் கொண்டது. கல்வி பெறுவதற்காக சிரமப்பட வேண்டியிருந்த வரையில் ரிஷி பையனுக்கு கல்வியை போதிக்கிறார். பையனுக்கு படிப்பில் நல்ல பழக்கம் ஏற்பட்டுவிட்டதும் அவர் அவனைப் பார்த்து, "ஏ வாலிபனே, இப்பொழுது நீ பையனல்ல. ஆகையால் படிப்பினால் உனக்குக் கஷ்டம் ஏற்படவில்லை. இனி நீ படித்துக்கொண்டே இருப்பாயானால் சுக ஜீவனத்தை விரும்பத் தொடங்கி விடுவாய். ஆகையால் சேவையிலிறங்கு." என்று சொல்லுகிறார். அந்த வாலிபன் சேவையில் இறங்கிவிட்டான். அவன் குடும்பம் ஒன்றை அமைத்து, குடும்பத்திற்காகப் பாடுபட்டான். பின்னர் அதுவும் அவனுக்குப் பழக்கமாகிவிட்டது. அப்பொழுது ரிஷி மீண்டும் கண்ணைத் திறந்து, "இனி நீ வீட்டை விட்டு வெளியேறு. மண்ணையும் பொன்னையும் துற." என்று சொன்னார். அப்பொழுது அந்தக் குடும்பி, "இந்த வயதிலும் சாஸ்திரத்திற்கு என் மீது தயை இல்லையா?" என்று கேட்கிறான். அதற்கு ரிஷி, "தம்பீ, தயையினால்தான் சாஸ்திரம் உனக்கு இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. இல்லையேல் உனக்கும் அலுப்பாகி விடும். உன் தோழர்களும் அலுத்துக்கொள்வார்கள், வாழ்க்கையே ரசமற்றதாய் பாரமாய்த் தோன்றும்." என்கிறார். அப்பொழுது அவன் வீட்டை விட்டு வெளியேறுகிறான். பணம் தேடுவதை விட்டு வானப்பிரஸ்தனாகி சமூகத்தொண்டனாய் தவ வாழ்க்கை வாழ்கிறான். ஆனால் அங்கும் அவனுக்கு எந்தக் குறையும் தோன்றக் காணோம். இதற்குள் ரிஷி மீண்டும் கண்ணைத் திறந்து, "இனி நீ நடக்க வேண்டும்" என்கிறார். அப்பொழுது அவன், "பெரியவரே, கோல் ஊன்றாமல் என்னால் நடக்கவே முடியவில்லையே. இந்த வயதில் என்னை நடக்கச் சொல்லுகிறீர்களே" என்கிறான். அதற்கு ரிஷி, "கோலை ஊன்றி நட. சமூகத்தின் பொருட்டு உன் கையில்தான் நான் கோலைக் கொடுக்க விரும்புகிறேன். அரசன் கையில் கோலைக் கொடுத்தால் அராஜகம் ஒழிந்தாலும் ஸ்ராஜகம் அல்லது அரசனுடைய கொடுமை தோன்றத்தான் செய்யும். ஆகையால் கோலைத்தாங்கும் தகுதி உனக்கே உண்டு" என்கிறார்.

நம்மிடையே ஒரு ஆங்கிலப் பழமொழி வழங்குகிறது. அதாவது, 'மாட்டுத் தொழுவத்திலிறப்பதை விட மாளிகையில் இறப்பது மேல்' என்பது. இந்தப் பழமொழியை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்த பழைய காலத்தவருக்குப் பொறுப்புகளை விடுவதென்றால் மனம் வருவதில்லை. காங்கிரசில் ஒரு பதவி கிடைத்து விட்டால் பிறகு அதிலிருந்து அவர்களைக் கிளப்ப முடிவதில்லை. அதே மாதிரிதான் ஸ்தல ஸ்தாபனங்களிலும். நான் கேட்கிறேன், "தம்பீ இந்த மாட்டுத்தொழுவம், அரச மாளிகை என்ற இரண்டு இடங்கள்தானா உலகத்தில் உயிரை

விடுவதற்கு வேறு இடமே இல்லையா? காட்டில் போய் இறக்கலாமே" நாள் தோறும் புதிய புதிய சோதனைகளைச் செய்து பார்க்கும்படி தர்மம் நமக்கு போதித்திருக்கிறது. ஆனால் இந்த வழியோ நமக்கு ஏதோ புதிய கதை போல் தோன்றுகிறது. குழந்தைகள் விளையாடும் ஒரு நாற்காலி விளையாட்டில் இடம் பிடித்து உட்கார்ந்திருப்பவர்களைப் பிடிப்பவர் எழுப்ப முயலுவதையும் உட்கார்ந்திருப்பவர்கள் எந்தக் கணத்திலும் எழுவதற்கு சித்தமாயிருப்பதையும் போல நாமும் வாழ்க்கையிலிருந்து வரவேண்டும். ஏதேனும் ஒரு பதவியிலிருப்பவர் யார் நம்மை எப்பொழுது எழச் சொல்லப் போகிறார்கள் என்று பார்த்துக் கொண்டே எழுவதற்குத் தயாராயிருக்க வேண்டும். புதியவர்கள் வந்து நமக்கு 'கல்தா' கொடுக்கும் வரையில் பழைய மனிதர்கள் காத்துக் கொண்டிருக்கக் கூடாது. நமக்குப் புதிய வழிகளும் புலனாவதில்லை. பழையதைச்செய்துகொண்டிருப்பதற்குத் திராணியும் இல்லை. ஆயினும் இருக்கும் இடத்தை மட்டும் நாம் விட சம்மதிப்பதில்லை. புதியவர்களிலும் சிலருக்கு பழைய மனிதர்கள் போய் விட்டால் எல்லாம் போய்விடுமோ என்ற பயமிருக்கிறது. இது வீண் பிரமையே அன்றி வேறல்ல.

நமது ஆரம்ப சூரத்தனம்.

நாம் எவ்வளவு ஆரம்ப சூரர்கள் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். சாந்தி சேனை அமைப்பது என்ற யோசனை தோன்றியதும் மக்களுக்கு அதில் தோன்றிய உற்சாகத்திற்கு ஒரு அளவே இல்லாதிருந்தது. இதுவரையில் செய்து வந்த வேலைகளெல்லாம் வீண், இது ஒன்றே உபயோகமானது என்பது போன்ற பாவனையில் பலர் அதில் வந்து சேர்ந்தனர். ஆனால் என்னுடைய 'தாம்' நதி மட்டும் அன்று போல் இன்றும் ஓடிக்கொண்டிருக்க, சாந்தி சேனையின் தொண்டர்களிடம் காணப்பட்ட ஊக்கமும் உற்சாகமும் இப்பொழுது வறண்டுபோயிருப்பதைக் காண்கிறேன். இப்பொழுது ஏதேனும் புதிய வேலை ஒன்றை தொடங்குவோமானால் அதிலும் பெருத்த ஊக்கம் காட்டப்படும். ஆனால் சிறிது காலத்திற்கெல்லாம் வண்டியை கிளப்புவதே அரிதாகி விடும். இது சரியல்ல.

புதிய ஊழியர்கள் கிடைப்பார்களா?

இம்மாதிரியான மகாநாடுகளில் நான் குறியாயிருப்பது இந்தச்சாக்கிலாவது ஒன்றிரண்டு புதிய ஊழியர்கள் நமக்குக் கிடைப்பார்களா என்பதிலேயே. எல்லாவற்றையும் துறந்து முழு மனதுடன் அல்லும் பகலும் சேவையில் ஈடுபடக்கூடிய ஒரே ஒரு ஊழியரை இந்த மகாநாடு நமக்கு அளிக்குமாயினும் இதை நாம் வெற்றி பெற்றதாகக் கருதலாம். சொந்த லாபத்திலும் கருத்துக் கொண்டு சேவையிலும் இறங்க விரும்பும் ஊழியர்கள் நமக்குத் தேவையில்லை, இத்தகைய மனிதர்களுக்கு இருபுறமும் இடியென்று துக்காராம் சொல்லியிருக்கிறார். சமூகத்திற்குசேவை தேவை யானால் இத்தகைய ஊழியர்கள் கட்டாயம் தோன்றி யாக வேண்டும்.

தியாகத்தினால் வளரும் தியாகம்.

நீங்கள் இப்பொழுது சிலவேலைத் திட்டங்களைக் குறித்து விவாதித்தீர்கள். எண்ணெய்த் திட்டம், வெல்லத் திட்டம்,

விவசாயத் திட்டம். ஒருவர் இது முக்கியமென்கிறார், இன்னொருவர் அது முக்கியமென்கிறார், எது முக்கியமாயினும் சரியே அதை நடத்துவதற்கு புதிய ஊழியர்கள் இருக்கிறார்களா? நான் உங்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பது உங்களில் எவரேனும் ஒருவருடைய உள்ளத்தில் என் நோக்கு புகாதா என்பதற்காகவே.

"நாங்கள் இதுவரையில் சிறிதும் தயங்காமல் எத்தனையோ வேலைகளைச் செய்தோம். செய்த தியாகங்களும் எத்தனையோ. கீதை கூறுவதைப் போல பயனை விரும்பாமல் பணியாற்றினோம்." என்று சொல்லக் கேட்கிறேன். நான் சொல்லுகிறேன்." "கீதை சொல்லுகிறபடியா? அதன்படி நடப்பது அவ்வளவு சுலபமா?" அவர்கள் மீண்டும் "சுயராஜ்யம் வந்தபிறகும் எங்களைத்தியாகம் செய்யச் சொல்லுகிறீர்களே" என்கிறார்கள். அதற்கு நான், "சுயராஜ்யத்திற்கு முன்பு நான்உங்களை உயிர்வாழச் சொன்னேன். இப்பொழுது சுயராஜ்யம் வந்துவிட்டதற்காக உயிரைவிடச்சொல்லவா? தியாகம் என்னவென்பதை ருசி பார்த்த ஒருவன்புதிய தியாகம் செய்ய அனுத்துக் கொண்டானானால் அவனை உண்மைத் தியாகத்தின் ருசியை உணர்ந்தவனென்றே சொல்வதற்கில்லை. ஒரு விதையை விதைத்தால் 10 மடங்கு விளைகிறது. அதே போன்று செய்யும் ஒரு தியாகத்திலிருந்து 10 மடங்கு தியாகம் செய்வதற்கு வேண்டிய ஊக்கம் பிறக்க வேண்டும். இவ்வாறு இல்லையானால் செய்த தியாகம் வீரியமற்ற தியாகமே."

இப்பொழுது சுயராஜ்யம் கிடைத்திருக்கிறது. இதன் பொருள் என்ன? இப்பொழுது நமக்கு பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதே. இதுவரையில் எதையும் செய்வதற்கில்லாத உரிமை இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கிறது. சுதந்திரம் கிடைத்திருக்கிறதுஎன்பதற்கு உருவானயெதையும் செய்வதற்கு அதிகாரம் கிடைத்திருக்கிறதென்பது பொருள். இதுவரையில் நாம் அடிமைகளாய் இருந்ததால் நமக்குகடமையென்பதே இல்லாதிருந்தது. இப்பொழுதோ நமக்கு கடமைகள் கிட்டியிருக்கின்றன. உடலில் சக்திவந்ததும் வேலை முடிந்து போய்விட்டதென்று எண்ணிக் கொண்டு கையைகட்டிக்கொண்டு ஒருவன் உட்கார்ந்து விடுவானானால் அவனை என்னவென்று சொல்வது? வேலையைத் தொடங்கவேண்டிய இடத்தில்,வாழ்வே முடிந்து போய் விட்டதாக கருதுவதாகவே அது இருக்கும். இதைப் போன்ற தவறு வேறுஇருக்கமுடியாது. இன்று நாம் இதையே செய்துகொண்டிருக்கிறோம்.

பொதுமக்களே பெருந்தெய்வம்.

இந்த சமயத்தில் நாட்டின் பொது மக்களிடையே சென்று இரண்டறக் கலந்து போய்விட வேண்டும். நாம் அவர்களிடம் இதுவரையில் நீங்களும் நாங்களும் பல காரணங்களினால் ஒன்று சேர இயலவில்லை. ஆங்கிலேயர்கள் எங்களைப்பல வழிகளில் மயக்கியிருந்தது ஒருபுறமிருக்க நாங்கள் கற்ற கல்வியின் பயனாக உங்களுக்குப் புரியும் பாஷையிலும் நாங்கள் பேசமுடியாதிருந்தோம். நமது பழைய தலைவர்களைப் பற்றி வியந்து உரைக்கையில் அவர்கள் ஆங்கிலேயர்களை விட சிறந்த முறையில் ஆங்கிலம் பேசி வந்தார்கள் என்று சொல்லக் கேட்கிறோம். சிலரோ தாம் கண்ட கனவும் ஆங்கிலத்திலேயே

கண்டுகொண்டிருந்தார்கள். நம் தலைவர்களின் பெருமை இத்தகையது. அதாவது இதை தாயையும் கன்றையும் பிரித்த நிலைமை என்றே கருதவேண்டும். இந்தப் பிரிவு இனித் தொலைந்தது, தாயும் பிள்ளையும் இப்பொழுது சந்திக்கிறார்கள். ஆகவே வாருங்கள் நாம் ஒருமிக்கச் சேர்ந்து பணியாற்றுவோம். அதற்கென தேவையான தியாகமும் புரிவோம். மக்களாம் கடவுளின் பணியில் மகிழ்ச்சியுடன் இறங்குவோம்.

கீதையில் ஒரு இடத்தில் யோகி தன் உடலை தியாகம் செய்யும் கட்டம் வர்ணிக்கப்படுகிறது. உடலைத் துறக்கும் சமயத்தில் யோகி இருளைப் பிளந்து கொண்டு சென்று உதய சூரியனைத் தியானிக்கிறான். யோகியின் அபிப்பிராயத்தில் உடலைத் துறக்கவேண்டிய நேரம் உதய நேரமாகிறது. நம் நாட்டின் இன்றைய நிலைமையும் அதுவே. பழைய செல்லரித்த சமூக சட்ட திட்டங்களை விட்டு விட வேண்டும். புதிய சமூகம் தோன்ற வேண்டும். இத்தகைய சந்திகாலமாகும் இது. இந்த சமயத்தில் மெய் மறந்திருப்பவர்கள் கிட்டியுள்ளதை இழந்து நீங்காத இருளில் ஆழ்ந்து விடுவார்கள். ஆகையால் எல்லோரும் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழவேண்டும். புதிய ஊழியர்கள் முன் வரவும் பழையவர்கள் அவர்களை வரவேற்று அவர்களுக்கு இடமளிக்கவும் வேண்டும்.

பவனாருக்கு வந்து அங்கு நடப்பதை பார்க்கும்படி நான் உங்களை அழைத்தாகி விட்டது. இன்னுமொரு விண்ணப்பம். உங்களில் அனைத்தையும் துறந்து என்னை அணுகவேண்டுமென்று எவர்களுக்குத் தோன்றுகிறதோ அவர்கள் கட்டாயம் வருவார்களாக. அவர்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது.

(ஸர்வோதயம் - நவம்பர்—50.)

எந்த பாஷையில் போதிப்பது?

ஆச்சார்ய வினோபாபாவே.

கருத்துப்பிழை.

எந்த பாஷையின் மூலமாக கல்வி அளிப்பது என்பதைக்குறித்து வீண் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுகிறவர்களெல்லாம் ஆங்கிலத்தின் புகழைப் பாட ஆரம்பித்து விடுகிறார்கள். ஆங்கிலேயர்கள்தான் இங்கிருந்து போய்விட்டார்களே என்பதற்காக அவர்களின் பாஷையின் மகிமையை நமது மூளையில் திணித்துப் புகுத்துவதற்காக முயற்சி செய்யப்படுகிறது போலும்! இம் முயற்சி எப்படி வெற்றி பெறும்? ஆங்கிலபாஷை ஒரு சிறந்த பாஷை யென்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் கல்வி எந்த பாஷையின் மூலமாக போதிக்கப்பட வேண்டும் என்பதற்கும், அதற்கும் என்ன சம்பந்தம்? போதனைக் கருவியாவதற்கு நமது பாஷைகளுக்கு இன்னும் சக்தி உண்டாகவில்லை யென்று சொல்லப்படுகிறது. ஆனால் இதில் ஒரு மாபெரும் கருத்துப்பிழை காணப்படுகிறது. உண்மையில் போதனைக்குதவும் கருவி பாஷையல்ல, செயலேயாகும். பாஷை தெரியாத போதி

லும் தாகமெடுத்த மனிதன் தன் அவதியை பிறருக்குத் தெரிவிக்க முடியும். மற்றவரும் பாஷை தெரியாதிருந்த போதிலும் இவன் தாகத்தால் தவிக்கிறானென்பதைத் தெரிந்து கொள்ளக் கூடும். பார்க்கப்போனால் நமது பாஷைகளுக்கு சக்தியில்லை என்கிறார்களே, எதற்கு சக்தியில்லை? எந்த விஷயத்தை வெளியிடுவதற்கு அவற்றிற்குத் திறமையில்லை? விஞ்ஞானத்தை யல்லவா? இந்த விஞ்ஞானத்தின் சோதனைகளை கையினால் செய்ய வேண்டுமே தவிர வாய்ப் பேச்சு தேவையில்லை. அப்படியானால் எங்கே சிரமம் தோன்றக்கூடும்? இந்தக் கலைச்சொற்கள் இருக்கின்றனவே அவற்றை இவர்கள் பெரிய பூச்சாண்டியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஞானமாயினும் சரி, விஞ்ஞானமாயினும் சரி, கலைச் சொற்களிலேயே அடங்கி விடுவதில்லை. அதைப்பற்றிய அனுபவம் முதலில் தோன்ற, அதை வெளியிடுவதற்குதவும் கலைச்சொற்கள் பிறகு அமைக்கப்படுகின்றன. நிதர்சனமான செயல் அனுபவத்தை நேருக்கு நேராகக் காண்கிறது. நிதர்சனமான செயலின் மூலமாகவே அதைச் செய்வதென்பது சாத்தியம். ஒன்றைச்செய்யும் பொழுது சொற்களும் கையாளப்படுகின்றன. ஆகவே இப்பொழுதைக்குச் சிறிது காலம் வரையில் ஆங்கிலக் கலைச்சொற்களையே கையாண்டு வருவதனாலும் ஒன்றும் நஷ்டமேற்பட்டு விடாது. ஹைட்ரோஜன் என்பதற்கு உத்ஜன் அல்லது உத்ரஜன் என்று சொல்வதா அல்லது வேறு சொல்லை உபயோகிப்பதா என்பது தீர்மானமாகும் வரையில் ஹைட்ரொஜன் என்றே சொல்லிவருவோமே. ஆனால் ஹைட்ரொஜன் என்ற சொல் உபயோகிக்கப் படுகிறது என்பதற்காக அத்துடன் ஆங்கில பாஷையையும் எதற்காக உபயோகிக்க வேண்டும்? நமது பாஷையிலும் அச்சொல்லைக் கலப்பதனால் நமது பாஷைக்குத் தீங்கு ஒன்றும் நேர்ந்து விடாது, அதன் அழகு கெட்டுப்போகாது. சுயராஜ்யத்தில் சிறிது காலத்திற்கு மௌண்ட் பாட்டன் தலைமை வகிக்கலாமென்றால் நமது பாஷையில் மட்டும் ஹைட்ரொஜன் என் செலாவணி யாகாதோ தெரியவில்லை; அதற்கு வாரிசான சொந்தச்சொல் வரும் பொழுது அது தானே விலகிப் போய் விடும்.

மத்யஸ்தமான வழி.

ஆனால் இதில் உள்ள முக்கியமான விஷயம் நமது மனதின் சோம்பேறித் தனம் பற்றியதாகும். அதனாலேயே சுலபமான தொன்றையும் நாம் கடினமானதாகச் செய்து கொண்டு விட்டோம். ஆங்கில பாஷையை ஒரு பாஷையாக நம் பிள்ளைகளில் சிலர் கற்பதென்பது நல்ல காரியமே. ஆனால் ஆங்கிலத்தை போதனைக் கருவியாக எதற்காக இருக்கவிட வேண்டும்? பாஷையென்றே எல்லாப்பிள்ளைகளும் ஆங்கிலத்தை மட்டும் கற்பதென்றாலும் அதுவும் ஆபத்திலேயே கொண்டுவிடும். அதன் தவிர்க்க முடியாத விளைவு என்ன ஆகுமென்றால் நாம் சுதந்திரக் கருத்துடன் உலகத்தை கவனித்து நிலைமையை உணர இயலாமற் போய்விடும். ஆங்கிலபாஷை நம் கண்களுக்கும் உலகக் காட்சிகளுக்கும் இடையில் ஒரு திரை போல் இருந்து நம்மை பார்க்க முடியாமல் தடுக்கும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம் நாடு இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரண்டின் குழுவில் கொண்டுபோய் சேர்க்கப் படும். ஆகையால் நாம் ரஷ்யன், ஜெர்மன், பிரஞ்சு, சீனா, ஜப்பான், பார்ஸி,

அரபி ஆகிய பாஷைகளையும் கற்க வேண்டும். அப்பொழுதுதான் பாரபக்ஷமில்லாத நடு நிலைமையில் நம்மால் இருக்க முடியும். இல்லையேல் நாம் பிறர் வாலைப்பிடித்துக்கொண்டு போக வேண்டியவர்களாகவே இருப்போம்.

நமது அரசாங்க நிர்வாகம் சிரமமின்றி நடப்பதற்கென ஆங்கிலத்திற்கு 15 வருஷங்களுக்கு உயிர் அளித்திருக்கிறோம். இதற்கு நாம் நமது வாழ்க்கையையே அதற்கு ஒருவகையில் அளித்திருக்கிறோமென்பது பொருளாகும். இனி நம்மால் ஹிந்தி கற்க முடியாதென்று எங்கும் வயது சென்றவர்களுக்கு இதன் மூலமாக உதவி ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மை. ஆனல் அதே சமயத்தில் ஆங்கிலேயர்களுக்கும் ,அமெரிக்கர்களுக்கும் நாம் வசதி செய்து கொடுத்து விட்டோம். எப்படியென்றால் நமது அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் நுணுக்கங்களை வருகிற 15 வருஷங்களுக்கு ஒரு அமெரிக்கனே, ஒரு ஆங்கிலேயனே எவ்வளவு சுலபமாகப் புரிந்துகொள்ள முடியுமோ, அவ்வளவு நம் நாட்டில் வாழும் ஒருவனலும் புரிந்துகொள்ள இயலாது. இதில் என்ன லாபமோ என்னவோ நமக்குத்தெரியாது, ஆபத்து மட்டும் உண்டு என்பதில் சந்தேகமில்லை.

வழிதுலக்கிகளாக வேண்டும்.

சிலரோ இதற்கு மாருக அரசாங்க நிர்வாகம் ஆங்கிலத்தில் நடக்குமென்ருல் ஆங்கிலமே போதன பாஷையாகவும் இருக்கட்டுமே என்கிருர்கள். இவர்கள் சொல்வது ஏற்கப்படுமானல் 15 வருஷமென்பது 50ஆக மாறக்கூடும். போதனை சாஸ்திரத்தின் கடமை முன்னல் நடந்து சென்று வழி துலக்கியாயிருந்து 15 என்று இருந்ததை 5 ஆகச் செய்வதாகும். அதுவே மெள்ள மெள்ள பின்னல் நடந்து வாத் தொடங்குமானல் நாட்டின் வாழ்வு முழுதும் தடைபட்டுப்போகும். ஆகையால் ஆண்மைக்கே இடமில்லாத வீண் விவாதங்களில் இறங்காமல், செய்ய வேண்டியதை உடனே செய்து தீர்ப்போமானல் சிந்தனைச் சகடம் சுழலத்தொடங்க எல்லாம் தெள்ளென விளங்கும்.

நாம் சிந்திப்பதே நம் பாஷையிலிருக்க வேண்டும். நாம் பிறிதொருபாஷையிலும் சிந்திப்போமானல் நமது ஆன்மாவே தலையெடுக்காது. இதையே பாருங்களேன், நமது சுதந்திர பாரத நாட்டிற்கென நாம் பல மாதங்களாக விவாதித்துச் சர்ச்சை நடத்தி ஆங்கில பாஷையில் ஒரு அரசியல் திட்டம் சமர்ப்பித்திருக்கிறோம். ஆனல் இந்த அரசியல் திட்டத்தின் தன்மையை இது எப்படிப் பட்டதென்பதை படிக்காதவர்கள் இருக்கட்டும், படித்தவர்களிலேயே பலர் அறியவில்லை. அரசியல் திட்டத்தைப் பற்றி ஆரம்பத்திலேயே நம் பாஷையில் ஆலோசிக்கப்பட்டிருக்குமானல் இதன் உருவமே வேருக அமைந்திருப்பதோடு அதன் விசேஷங்கள் அனைத்தையும் மக்கள் அனைவரும் அறிந்து கொண்டிருப்பார்கள். இப்பொழுது அது ஒரு புத்தகத்துள் அடங்கிக்கிடக்க அதன் மொழி பெயர்ப்புக்கள் மூலத்திலும் கடினமாக நம்பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. கைத்தொழிலின் மூலமாக அளிக்கப்படும் ஆதாரக்கல்வி இருக்கிறதே அந்தக்கல்வி முறைக்கு நான் "சமவாயமுறை" என்று பெயரிட்டிருக்கிறேன். விஷயம் அறிந்தவர்கள் 'சமவாயம்' என்கிறீர்களே அதில்

Correlation என்ற ஆங்கிலச் சொல்லில் அடங்கியுள்ள கருத்து முழுதும் அடங்கவில்லை போலிருக்கிறதே என்று கேட்டார்கள். அதற்கு நான் Correlation என்பதற்கு பதிலாக நான் இந்தச் சொல்லைக் கூறவில்லையே. இது நமது முறைக்கு நான் இட்டுள்ள பெயர். நமது வேலைமுறையில் கைத்தொழிலும், அறிவுப் பயிற்சியும் வெவ்வேருனவை என்ருே இரண்டும் ஒன்றென்ருே சொல்வதற்கில்லாமல் ஒன்றிலொன்று அடங்கியது. இந்தக் கருத்தை நமது பாஷையில் 'சமவாயம்' என்கிருேம் என்றேன் அதற்கு அவர்கள், இந்த சமவாயம் என்பதற்கு ஆங்கிலச் சொல் என்ன என்ருர்கள். நாஞே, "சமவாயம் என்பதற்கு ஆங்கிலச் சொல்லைக்கண்டு பிடிப்பதோ correlation என்பதை நமது பாஷையில் (ஹிந்தி) மொழிபெயர்ப்பதோ என் ஜோலியல்ல. நமது சோதனைகளின் பயனுகத் தோன்றியுள்ள கல்வி முறை இருக்கிறதே, அதற்கு ஒரு பெயரையளிப்பதே என் வேலை. அதையே நான் செய்திருக்கிறேன்" என்றேன். இவ்வாறே நமது அரசியல் திட்டம் பற்றிய ஆலோசனைகளையும் நமது பாஷையிலேயே நடத்த முடிந்திருக்குமானல் சமவாயமென்ற சொல் ஆதாரக்கல்வி ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரிடையே செலாவணியர்கியிருப்பதைப் போல அதன் சொற்களும் ஆகியிருக்கும். அதாவது அதன் சொற்களும் ஜீவனுள்ளவையாய் அமைந்திருக்கும். ஜீவனுள்ளவை எவையோ அவை சுலபமாக ஜீவனை அளிக்கக் கூடியவையும் ஆகின்றன.

இந்தக் கருத்துப் புரட்சியை வியாபாரத்திலும் பிற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்களால் செய்ய முடியாது. இது ஆசிரியர்களும், போதகர்களும் சிந்தனை சீலர்களும் செய்யவேண்டிய வேலை. ஆகையால் அவர்கள் பிறரைத் தொடர்ந்தோ பிறருடன் கைகோர்த்துக் கொண்டோ போவதென்பது சரியல்ல. முன்னல் சென்று பிறருக்கு வழி துலக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையதாகும்.

(ஸர்வோதயம்—
டிசம்பர்-50)

★ ★ ★

மகாதேவ் தேசாயின் இறுதி நான்கு நாட்கள்.

ஸ்ரீமதி. ஸுசீலா நையார்.

(முன் கதர் மலர், 183-வது பக்கத்தின் தொடர்ச்சி)

கைதிகளில் நால்வர் சமையல் அறையில் வேலை செய்கிருர்கள். அவர்களுள் இருவர் கத்யவாரைச் சேர்ந்த குஜராத்திகள். ஒருவன் கள்ள நாணயம் தயாரித்த குற்றத்திற்காக சிறையிலிடப்பட்டவன். இவனும் இவன் சகோதரன் ஒருவனும் சேர்ந்து 15 ஆயிரம் ரூபாய் சேர்த்தார்களாம். பிறகு ஒருவன் குற்றம் தன்னுடையதே என்று ஒப்புக் கொண்டானும். பணத்தைக் கொண்டு ஏராளமாக நிலம் வாங்கினன். ஆயிரம் ரூபாய் வரையில் டாக்டருக்குக் கொடுத்

தான். டாக்டர் இவனுக்கு புத்திக் கோளாறு என்று 'சர்டிபிகேட் எழுதிக் கொடுக்கவே தண்டனையும் குறைந்து போயிற்று. அவன் மஹாதேவ் பாயிடம், என்ன 2, 3 வருஷ சிறைவாசம் செய்தேன். பிறகு வெளியில் போனால் சௌக்கியமாக இருப்பேன்" என்றான். பிறகு, "ஐயா உங்கள் சுயராஜ்யம் நடக்கும் காலத்தில் நாணயம் அச்சிடும் வேலைக்கு என்னை அழைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

பூரா என்ற வேறொரு கிழகாத்யவார் கைதி இருந்தான். அவனை எல்லோரும் காகா என்று அழைத்தார்கள். சிப்பாய்கள் கூட அவனை காகா என்று கூப்பிடுவார்கள். அவனுக்கு யாரும் லக்ஷியமில்லை. எல்லோருக்கும் வேலை ஏவிக்கொண்டேயிருப்பான். அவன் ஹிந்து முஸ்லீம் கலகத்தில் பிடிக்கப்பட்டான். பிறரைக் காக்கும் முயற்சியில் தன்னை சிறையிலிட்டுவிட்டதாக அவன் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுவான். அவன் பல தடவை சிறைக்கு வந்துள்ளவனென்று பிறகு தெரிய வந்தது. எப்பொழுதும் அடிதடி சண்டை சச்சரவுகள்தான் அவன் சிறைக்கு வருவதற்குக் காரணம். பெரிய வாயாடி. மஹாதேவ்பாய் கீழே காய்கறிகள் அரிவதற்குப் போகும் பொழுதெல்லாம் கைதிகளுடன் இஷ்டம்போல் பேசி விட்டு வருவார். குஜராத்தி பேசும் இந்த இரு கைதிகளும் அவரைத் தம் சகோதரர் என்றே மதிக்கலானார்கள். என்ன இருந்தாலும் நாம் குஜராத்திகளல்லவா என்று சொல்லுவார்கள். மஹாதேவ்பாய் தாமும் இவர்களைப் போன்றவரே என்று அவர்கள் எண்ணக்கூடிய முறையில் பேசுவார். இதனால் இவர்கள் அடிக்கடி, "மஹாதேவ்பாய், நாங்கள் ஸூரத் ஜில்லாவில் உங்கள் வீட்டிற்கு வருகிறோம்" என்று சொல்வதுண்டு.

அதற்கு மஹாதேவ்பாய், "ஆம், கட்டாயம் வாருங்கள்" என்பார். கைதிகள் வேறு, தாம் வேறு என்று காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக அவர் தாமும் கைதிகளின் உடையையே தருவித்து உடுத்திக் கொள்வதென்று தீர்மானித்திருந்தார். ஒரு நாள் பூரா, "நான் விடுதலையாகப் போகிறேன். ஏதேனும் கடிதமுண்டானால் கொடுங்கள், நான் கொண்டுபோய் கொடுக்கிறேன்" என்றான். உன்னை சோதிக்க மாட்டார்களா என்று நான் கேட்டேன். அவன் உடனே முட்டை உருவிலிருந்த ஒரு டப்பியை எடுத்துத் திறந்தான். பிறகு அதற்குள் ஒரு காகிதத்தை வைத்து மூடி வாய்க்குள் அடக்கிக் கொண்டு, "வேண்டுமானால் சோதித்துக் கொள்ளுங்களேன்." என்றான். வாய்க்குள் எதுவும் இருப்பதாகவே தெரியவில்லை. டப்பியை மறைத்து வைப்பதற்கு அவன் தொண்டையில் ஒரு பை இருக்கிறதுபோலும்! எங்களால் டப்பியை கண்டுபிடிக்க முடியாமற் போகவே அவன் ஒரு முறை வாயைத் திறந்து ஓக்காளித்ததில் டப்பிவெளிவந்து விட்டது. அதைத் திறந்து காகிதத்தை எடுத்துக் கொடுத்தான். மஹாதேவ் பாய் பாபூ உபவாசம் ஏதாவது செய்து சர்க்கார் அதுபற்றிய செய்தி எதையும் வெளியில் அனுப்புவதில்லையென்றிருந்தால் இவன் மூலமாக நான் கட்டாயம் கடிதம் அனுப்புவேன் என்றார். உன்னிடம் பணம் இருக்கிறதா என்று என்னைக் கேட்டார். நான் 5 ரூபாய் இருக்கிறதென்றேன். "ஏதேஷ்டம், பம்பாய் வரையிலும் போவதற்கு ஆகும்

செலவை இவனுக்குக் கொடுத்துவிட்டால் போதும். பிறகு அங்குள்ள நண்பர்கள் வேண்டியதை செய்து கொள்வார்கள்'' என்ருர்.

எரவாடாவிலிருந்து வரும்பொழுதும் அங்கே திரும்பிப் போகும்பொழுதும் இந்தக் கைதிகள் எல்லோரும் சோதிக்கப்படுகிருர்கள். எரவாடா சிறையிலும் இவர்களைத் தனியாக ஒரு அறையில் வேறு கைதிகள் இவர்களிடமிருந்து இவ்விடத்திய செய்திகளை தெரிந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு அடைத்து வைக்கிருர்கள். ஆயினும் அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் இவ்வளவு இவ்வளவு புதிய கைதிகள் வந்தார்களென்ற செய்தியை எங்களுக்குத் தராமலிருப்பதில்லை. சிறைவாயிலில் ஒவ்வொரு நாளும் புதிதாக வந்த கைதிகளின் எண்ணிக்கை எழுதப்படுவதுண்டு. அரசியல் கைதிகளுக்கு இடம் கொடுப்பதற்காக சாதாரணக் கைதிகள் ஏராளமாக விடுவிக்கப் பட்டும் வந்தார்கள். இந்த வகையிலாவது பாவம் அவர்களுக்கு நன்மை ஏற்பட்டது விசேஷந்தான்.

வைஸ்ராய்க்கு எழுதப்பட்டு வந்த கடிதத்தை முடித்தானபிறகு இன்று மத்தியானத்தில், பாபூ 'பஸிபிக் அபேர்ஸ்' என்ற பத்திரிக்கையை படிக்கலானுர். அதில் Teleological connection between Bourgeois democracy, revolution and industrialism! என்ற வாக்கியம் வந்திருந்தது. பாபூ, Teleology என்ற சொல்லுக்குப் பொருள் கேட்டார். மஹாதேவ் பாயிடம் கேட்டார். அகராதியைப் பார்த்தார். அது பற்றி வெகு நேரம் பேச்சு நடந்தது. கடைசியில் பாபூ இதை Argument in a circle என்று அதாவது ஸ்தாபிக்க வேண்டிய விஷயத்தையே விவாதத்திற்கு அடிப்படையாகக் கொள்ளுதல் எனலாம் என்ருர். பிறகு இலக்கணப்படி reek என்ற சொல்லுடன் of வருமா, with வருமா என்பதைக் குறித்து தர்க்கம் நடந்தது. பாபூ கிழவியை [ஸ்ரீமதி ஸரோஜினி தேவியை] கேளேன் என்ருர். அதற்கு மஹாதேவ் பாய் அவரால் சொல்லமுடியாது. இது உங்களையும் என்னையும் போன்ற ஸ்கூல் உபாத்தியாயர்கள் இலக்கண புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்து இங்கே முற்றுப்புள்ளி இருக்க வேண்டும், அங்கே இருக்கக் கூடாது என்று தீர்மானிக்கவேண்டிய விஷயம்'' என்ருர்.

பாபூ என்னிடம் varicose என்ற சொல்லுக்கு பொருள் என்னவென்று கேட்டார். நான் பொருள் கூறினேன். அவர், இதன் பகுதி என்ன? இது எத்தனை வகையாக மாறக்கூடும்? எந்தெந்த இடங்களில் இதை உபயோகிக்கலாம் என்பதையெல்லாம் சொல்ல வேண்டும் என்ருர். பிறகு "நீ லத்தீன் பாஷை கற்றல் அவசியம், நான் உன்னை ஒரு படித்த டாக்டராக்க விரும்புகிறேன்'' என்ருர். என்னை அகராதியின் முன்னுரையை படிக்கும்படியும் அப்பொழுதுதான் அகராதியை முற்றிலும் புரிந்துகொண்டு உபயோகிக்க முடியுமென்றும் அறிவித்தார்.

மாலையில் மஹாதேவ்பாய் கீழே இறைந்து கிடந்த இரும்புக் கம்பிகளை பொறுக்கி ஒரு 'டோஸ்டர்' தயாரித்துக் கொணர்ந்து அதை பாபுவுக்குக் காட்டினுர். பாபூ மிகவும் சந்தோஷப்பட்டார். Necessity is the mother of invention என்ருர். பிறகு இதை குஜ

ராத்தியில் எப்படிச் சொல்லலாம் என்ருர். மஹாதேவ்பாய் சிறிது யோசித்தபின் "கரஜ்வ சோத்னி ஜனே தா சே" என்ருர்.

மஹாதேவ்பாய் ஒவ்வொரு நாளும், "சர்தார் வந்துவிட்டாரானல் பாபுவை சதா சிரிக்கச் செய்து கொண்டேயிருப் பார். அவர் மட்டும் வந்து அதுவரையில் பியாரேலால் வராதிருந்தால் நான் பியா ரேலால் வந்தாக வேண்டும் என்று வற் புறுத்திக் கேட்க முடியும்" என்ருர்.

மீராபஹன் இன்று மீண்டும் என் னிடம் மஹாதேவ்பாயிக்கு தலை மாலிஷ் செய்ய வேண்டும் என்ருர். அதற்கு நான் அவரைக் கேட்டதற்கு வேண்டா மென்று சொல்லிவிட்டாரே என்றேன். அவர் நாளை முதல் பாபுவுக்கு படுக்கை முதலியவைகளை நீ போடு. நான் அந்த சமயத்தில் மஹாதேவ்பாயின் தலைக்கு மாலிஷ் செய்கிறேன். நான் செய்வதில் அவருக்கு தடையிராதென்று எண்ணு கிறேன்" என்ருர். நான் சரியென்றேன். பிறகு இன்று நான் மீண்டும் மஹாதேவ் பாயிடம் போய் உங்கள் தலைக்கு மாலிஷ் செய்யட்டுமா என்று கேட்டதற்கு அவர் என்ன அவசியம் என்ருர். ஆனல் அவருடைய குரலின் த்வனியிலிருந்து களைத்திருப்பதாகவும் மாலிஷ் செய்து கொள்வதற்கு பாதி மனம் உள்ளவர் போலும் தோன்றிற்று. அதற்கு நான் உங்களுக்கு அது வேண்டியதுதானே, வீட்டிலிருக்கையில் நீங்கள் மாலிஷ் செய்து கொள்வதுதான் வழக்க மாயிற்றே என்றேன்.

அவர், "ஆம், பம்பாயில் லீலாவதி மாலிஷ் செய்து விடுவாள்'! என்ருர். அவர் சங்கோசத்தினல் என்னை செய்யச் சொல்லாமலிருக்க, எனக்கும் செய்யத் தான் செய்வேனென்று சொல்வதற்கு சங்கோசமாயிருந்தது. தேவையான பொழுது நீங்கள் என்னை மாலிஷ் செய்யச் சொல்லலாமென்று சொல்லி விட்டு நான் வந்து விட்டேன்.

மாலையில் மஹாதேவ்பாய், "பாபுவின் இந்த உபவாசம் பெரிய வாளைப் போல் என் தலைக்கு மேல் தொங்கிக் கொண் டிராவிட்டால் என் உடம்பின் எடையும் கொஞ்சம் கூடியிருக்கும். என் தெம்பும் கொஞ்சம் அதிகமாகியிருக் கும்" என்ருர்.

(தொடரும்.)

புரட்சி சுலபமாக ஏற்படுவதில்லை.

ஸ்ரீ. தீரேந்திர மஜும்தார்.
(அக்கிராசனர், சர்க்கா சங்கம்.)

நிர்மாண ஊழியர்கள், ஆக்க வேலை யில் மட்டும் ஈடுபட்டிருக்கிருர்கள். அவர்கள் தங்கள் வேலைகளை அழிக்கக் கூடிய சக்தி, ஸ்தாபனம், திட்டங்கள் இவற்றிற்கு எதிராக கவனம் செலுத்து வதில்லை. அவர்கள் கிராமக் கைத் தொழில்கள் நடத்துவார்கள். ஆனல் மில் தொழில்களை பகிஷ்காரம் செய்யும் விஷயங்களைப்பற்றிப் பேசுவதில்லை. செக்கு ஆட்டும் தொழிலை நடத்து வார்கள். ஆனல் மில் எண்ணெயில் தயா ரித்த பண்டங்களை உண்ணக்கூடாது

என்ற நியதி அவர்களுக்கு இருப்பதில்லை. மில்லில் அரைத்த மாவையோ, அல்லது மில்லில் அரைத்த அரிசியையோ, சாப்பிடும் சமயம் அவைகளைப் பற்றி சிந்திப்பதில்லை. ராட்டை நூற்கும்போது ராட்டை எதற்காக என்பதைப் பற்றியும் சிந்திப்பதில்லை. அவர்கள் மில்லில் தயாரித்த சர்க்கரையை சாப்பிடும்போது ராட்டை நூற்பது, யந்திரத்தொழில் நாகரீகத்தை அழிக்கும் முயற்சி என்பதைப்பற்றி எண்ணுவதில்லை. இப்படிப்பட்ட அநேக விஷயங்களில் நமது தொண்டர்கள் மதி மயங்கி இருக்கிறார்கள். கிராமக் கைத்தொழில்களை நடத்தி, கிராம நாகரீகத்தை புனருத்தாரணம் செய்ய விரும்பினோமானால், நாம் யந்திரத் தொழில்களையும், நகர நாகரீகத்தையும் பகிஷ்காரம் செய்ய வேண்டியிருக்கும். இந்த பகிஷ்காரம் தொண்டர்களின்குடும்பங்களிலிருந்தும், நிர்மாண ஸ்தாபனங்களிலிருந்தும் சம்பூர்ணமாக செய்ய வேண்டியிருக்கும். பிறகு தொண்டர்களும், ஸ்தாபனங்களும் தங்களுக்கு அக்கம் பக்கத்தில் அதற்குத்தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். அதன் பின் தேசம் முழுவதிலும் இந்த இயக்கத்தை நடத்த வேண்டும். ஜடப்பொருளைப் போன்று நாம் இன்று ஸர்வோதயக் கருத்துகளுக்கு மதச்சடங்கு செய்பவராக மட்டும் உட்கார்ந்திருக்கிறோம், இம்மாதிரி நாம் நடந்து கொண்டிருந்தால் நாம் அழிந்துவிடுவோம்.

நாம் எல்லோரும் நமது வாழ்க்கையில் ஏதோ தியாகம் செய்கிறோம், புரட்சி செய்வதில்லை. ஆனால் சமூகத்தில் நம் மூலம் புரட்சி ஏற்படவேண்டுமென்று விரும்புகிறோம். அம்மாதிரி நடக்காது. தியாகம் மூலம் வாழ்க்கையின் போக்கை அடிப்படையாக மாற்றுவதுதான் புரட்சியாகும். நாம் எவ்வளவு தியாகம் செய்தாலும், நமது சொந்த, குடும்ப வாழ்க்கைமுறைகளெல்லாம், நகர அல்லது கிராமத்தைச் சுரண்டும் வர்கத்திற்கு அனுகூலமாகவே இருக்கிறது. வாழ்க்கையின் விருப்பங்களும், தாகங்களும் அதைநோக்கியே ஓடுகின்றன. இம்முறையை மாற்றி ஊழியர்களின் வாழ்க்கையை உழைப்பாளிகளின் வாழ்க்கை முறைக்குக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. தொண்டர்களின் வெவ்வேறு விதமான சக்திகளின் காரணத்தினால் அவர்கள் மாறுதலில் அநேக விதமாக பூர்த்தியடையாமல் இருக்கலாம். ஆனால் அந்தத்திசையில் முன்னேற்றமாக அடியெடுத்து வைப்பது எல்லா தொண்டர்களுக்கும் அவசியம். இல்லையென்றால் நாம் பேசக்கூடிய பொருளாதார, சமூகப் புரட்சி விஷயங்களெல்லாம் ஒருவிதமான நாடக விளையாட்டாகிவிடும். உண்மையல்லாததின் காரணத்தினால் பயனற்றதாகிவிடும்.

இத்திசையில் ஊழியர்கள் இன்றைய கிராம நிலைமையை தெரிந்து கொள்ள வேண்டும். இன்று கிராமக்குடியானவர்களிடமும், உழைப்பாளிகளிடமும் சென்றால் அவர்களின் முன் தியாகத்திற்கு மதிப்பு இல்லையென்பதை நீங்கள் காண்பீர்கள். நாம் சிறியவர்களாக இருந்த போது தியாகம் செய்த ஜனங்களிடம் சேவைசெய்யச்சென்றோம். அச்சமயத்தில் தியாகத்திற்கு மதிப்பு இருந்தது. குறிப்பிட்டவரின் மகன் இம்மாதிரி (தியாகம்) வேலை செய்து வந்தார் என்று சொல்லி வந்தார்கள். மேலும் அவர்கள் நம்மை நம்பிக்கை

127776 சென்னை-600 008

யுடன் (மரியாதையாக) நோக்கி வந்தார்கள். ஆனால் இன்று அப்படி அல்ல. காங்கிரஸின் கைக்கு அதிகாரம் கிடைத்ததினால் இம்மாதிரி மனோநிலைமைக்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளது. சிறிய வீடுகளை விட்டு விட்டு குடிசைகளில் போய் வசித்தவர்களெல்லாம் இன்று முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது பெரிய வீடுகளில் வசிக்கிறார்கள் என்பதை ஜனங்கள் பார்த்தார்கள். ஆகையினால் நாம் செய்யக்கூடிய தியாகமெல்லாம் தியாக மல்ல. லாபத்திற்காக போட்ட முதல் "இன்வெஸ்ட்மென்ட்" என்பதை ஜனங்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஜனங்களின் வாழ்க்கைப் போராட்டம் மிகவும் கடினமாகி விட்டது. ஜனங்கள் இன்று குழப்பத்திலும், அமைதியற்றும் இருக்கிறார்கள். முன்னால் தியாகம் செய்த சிலர் மட்டும் இப்பொழுது போகத்தில் இருப்பதை பார்த்து அவர்களால் சகிக்கமுடியவில்லை. ஆகையால் இன்றைய தொண்டர்கள் ஜனங்களுடன் வாழ்க்கையில் கலந்து போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கும். அவர்களும் ஜனங்களைப்போன்று சரீர உழைப்பின் மூலம் உற்பத்தி செய்துகொண்டே ஜன சேவை செய்ய வேண்டும். நமது முந்திய பழக்க வழக்கங்களின் காரணமாக இம்முயற்சியில் நாம் எல்லோரும் தேர்ச்சியடையாதவர்களாக இருக்கலாம். ஆனால் இத்திசையில் நாம் நிச்சயமான அடியெடுத்து முன்னேற வேண்டியிருக்கும். இல்லையெனில் நாம் முயற்சியற்றவர்களாகவும் பலனில்லாதவர்களாகவும் ஆகிவிடுவோம். ஜனங்களை நம்முடன் அழைத்துச் செல்லவில்லையாயின் நம் சாதனைகளெல்லாம் உயிரற்றதாக ஆகிவிடும்.

சர்க்கா சங்கத்தின் கர்னாடகக் கிளையின் தொண்டர்கள் முகாமிற்கு அனுப்பிய செய்தி. (பிப்ரவரி 51, சர்வோதயம்.)

★ ★ ★

உழைப்பு தேவதையை உபாசனை செய்வோம்.

12—2—50உ ஸர்வோதய மேளாவில் ஆச்சாரிய விநோபாஜியின் கோஷம்.

சகோதர சகோதரிகளே!

இந்த மத்தியானத்தில் நாம் எல்லோரும் ஏன் இங்கே கூடியிருக்கிறோம்? உங்களில் பலர் வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்; கால் நடையாகவும் சிலர் வந்திருக்கிறீர்கள் என்பதும் எனக்குத்தெரியும். இந்த வேளையில் மிகவும் ஆர்வமுள்ள ஸ்ரீ தத்யாஜி வஜல்வர் நாகப்பூரிலிருந்து தனது குடும்பத்துடன் வந்திருக்கிறார். அப்படியே நாகப்பூரிலிருந்து நிரந்தர நிர்மாண சேவைத் தொண்டர் ஸ்ரீ பூனம்சந்த் தனது குடும்பத்தையும் மற்ற சகோதர சகோதரிகளையும் கால் நடையாகவே இங்கு கொண்டுவந்திருக்கிறார். அவருடன் கூட 7 மாத பால்குடிக்கும் குழந்தையுடன் ஒரு சகோதரியும் நடந்து வந்திருக்கிறார். சாந்தா ஜில்லாவிலிருந்து பலர் 125 மைல் நடந்து இங்கே வந்திருக்கிறார்கள். இவைகளை கேட்க எனக்கு மகிழ்ச்சியே. உங்கள் எல்லோர் மனதிலும் ஏதோ ஒரு உயர்ந்த பாவமும், உணர்ச்சியும் நிறைந்திருப்பதாக நான் நம்புகிறேன். ஆகையால் தாங்கள் ஏதோ ஒரு வித பைத்தியத்துடன் இங்கே கூடியிருக்கிறீர்கள்.

இந்த மத்யான வேளையில் நாமெல்லோரும் ஏதோ ஒரு சங்கல்பம் செய்துகொண்டு இங்கே வந்திருக்கிறோம். 3 வருஷம் முன் காந்திஜி தன் சிறு உடலை விட்டு விட்டு சென்று விட்டார். அவரது அந்தராத்மாவின் பலத்தால் உலகமே இயங்க ஆரம்பித்திருக்கிறது. அன்று முதல் நாம் அவர் சங்கல்பத்தின் கருவியாகிவிட்டோம். அவரது அந்த சங்கல்பத்தை நமது மனதில் நாம் ஏற்றிருக்கிறோம். அது நமக்கு தூண்டுதலும் ஊக்கமும் கொடுக்கிறது. இங்கு வருவதால் உங்களுக்குக் கிடைக்கக்கூடியது என்ன என்பதை யோசியுங்கள். தங்கள் தங்கள் வீட்டை விட்டு கால்நடையாகவே இவ்வளவு தூரம் வந்த எல்லோருக்கும் என்ன கிடைக்கிறது. அவர்கள் மனதில் ஏதோ சங்கல்பம் இருக்கிறது. அதாவது உங்கள் ஒவ்வொருவர் மனதிலும் உள்ள சங்கல்பத்தையே என்னைக் கொண்டு சொல்லவைக்கிறீர்கள். அதன்படியே நடக்கவும் முயற்சிப்பீர்கள்.

நாம் எல்லோரும் இங்கே கூட என்ன காரணம்? இதற்கு ஒரே பதில் தான் என்னிடம் உண்டு. நாம் உலகத்தையே மாற்றஇங்கு கூடியிருக்கிறோம். எவ்வளவு பெரிய வார்த்தையை என்னை சொல்லவைத்துவிட்டீர்கள்? ஆனல் இன்று இவ்வளவு பெரிய சொல்தான் கடவுளுக்குப்பிரியமானது. உள்ளே ஒன்றுமில்லாமல் அற்பமான புல்லாங்குழலிலிருந்து கம்பீரமான — கானத்தை ஒலிக்கச் செய்யும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அதேபோல ஒன்றுமில்லா எளியவராகிய நம் மூலம் தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறர். நாம் எல்லோரும் அவனது உடைந்த புல்லாங்குழல்களே. நமக்கு யுக்தியால் உண்ணக்கிடைக்காது, உடுக்க கிடைக்காது. நம்மிடம் யுக்தி இல்லை. ஆனல் ஒரு அற்பமான சாதனம் மூலம் கடவுள் வேலை செய்கிறர். இதே அவருக்கு பிரியம். அவர் ஏதோ ஒரு காலத்தில் வானரங்களை வைத்துக் கொண்டு வேலை செய்தார்; பசுபரிபாலனம் செய்தார். அதே கடவுள் — பரமேஸ்வரன் இன்று ஆயிரக்கணக்கான வருஷங்களாக பீடிக்கப்பட்ட இந்தியாவின் மக்களை வைத்துக் கொண்டு வேலை செய்ய விரும்புகிறர். சிந்தித்துப் பாருங்கள்! சென்ற 4 வருஷங்களுக்கு முன் நம் குரலை கேட்பாரில்லை; நமது விஷயங்களைக் கேட்க ஒருவருக்கும் போதிய சமயமில்லை; நமது குரல் மனிதனின் குரலாகவே மதிக்கப்படவில்லை; நம்மை மிருகங்களாக எண்ணினர்கள். ஆனல் இன்று உலகம் நமது குரலை கேட்டுத் தான் ஆகவேண்டியிருக்கிறது. ஆகையால் இன்று நாம் நமது கடமையை உணர வேண்டும். இன்று உலகம் நம்மை மதிக்கிறது. நாம் மட்டும் கர்வத்தை விட்டுவிட்டால் நமது உடம்பில் ஏதோ ஒரு சக்தி இயங்குவது அனுபவப் பட்டுவிடும். துகாராமைப் போல, இந்த உடம்பு நமதல்ல என்றும், இதில் ஏதோ ஒரு சக்தி பிரவேசித்திருப்பது நமக்கு புலப்படும். அதிலிருந்து இன்று கடவுள் பேசுகிறர். மேளாக்கள் நடக்கின்றன; அதில் பணத்தின் திருவிளையாடலையே நாம் காண்கிறோம். உலகம் பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்யுங்கள். எங்கு போனலும் பணமே தென்படும். நமக்கு பணம் தேவையில்லை என்ற விஷயம், நமக்கு இப்பொழுது தெரியவந்திருக்கிறது. நமக்கு உழைப்பு தேவை. சரீர உழைப்பால் வயிறை வளர்க்கும் விவசாயிகள், தொழிலாளிகள், மற்ற கடின

உழைப்பாளிகள் இவர்களின் உழைப்பால் கிடைக்கும் தூய்மையான வஸ்துக்கள் கடவுளுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகிறது. நீங்கள் இங்கே உங்கள் நூல் காணிக்கை கொடுத்திருக்கிறீர்கள். இங்கே நேரில் வரமுடியாதவர்கள் மற்றவர்கள் மூலம் அனுப்பியிருக்கிறார்கள். இது என்ன பைத்தியம். சகோதரர்களே, துகாராம் சொன்னதை நாம் சொல்லுவோமானல் — அந்த வார்த்தை நம் மனதில் தோன்றும்பொழுது — இந்த நூல் சிட்டங்கள் எவ்வளவு உயிருள்ளவை என்பது விளங்கும். **"பணம் நமக்கு பசுவின் மாமிசம்"** என்று சொன்னார் துகாராம். இதைவிட சக்தியுள்ள மொழி யார் சொல்வார். அதையே இன்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆகையால் உங்கள் வேலை சிறியதல்ல. உலகத்திலேயே விசித்திரமானது. புரட்சியை உலகத்தில் உண்டுபண்ணக்கூடியது. இதைச்செய்யவேண்டும் அல்லது மடியவேண்டும் என்பதே நமது சேவையும் லக்ஷியமும்.

மராத்தி பிரார்த்தனையில் கூறியது போல் ஈஸ்வரனிடத்திலிருந்து பிரியாமல் அவனது சேவையிலேயே என் சரீரம் தேய்ந்துபோக அருளவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை. இதற்காகவே எங்கள் முயற்சி. இதற்காகவே நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

இவ்வருஷம் காங்கிரஸ் மகாசபை ஆமதாபாதில் கூடி அங்கத்தினர் கட்டணம் ஒரு ரூபாய் ஆக ஆக்க தீர்மானித்தது. முன்னால் நான்கு அணாவாக இருந்தது. ஆனல் அந்த நான்கு அணா இப்பொழுது 1 ரூபாய்க்கு சமம் தான். இப்படி நிமிஷம் நிமிஷம் மாறுதல் அடையக்கூடியது பணம். அதனிடம் ஸ்திரமான மதிப்பு இல்லை. இன்று ஒரு மதிப்பு, வேறு சமயத்தில் வேறு மதிப்பு. நம்பத் தகுதியற்ற பொய். இப்படியிருந்தும்கூட நமது பணத்தாசை, பொருளாசை தீர்ந்தபாடில்லை. 4 அணாவிற்கு பதிலாக ஒரு ரூபாயாக நிச்சயித்துவிட்டோம். "நீ எவ்வளவு நாட்கள் எந்த எல்லைவரை இந்த பணத்திற்கு முன் மண்டியிட்டு உழைப்பாய்? இந்த உலகில் எவரிடம் பணம் இருக்கிறதோ, அவரிடம் என்ன இருக்கிறது" என்று கேட்கிறேன்? பால் இருக்கிறதா? தயிர் இருக்கிறதா? வெண்ணை இருக்கிறதா? பூமி இருக்கிறதா? அவர் பண பிரமையில்தான் இருக்கிறார். இது ஒரு வெறும் பிரமையே. அவரிடம் உள்ள இந்த தவறை, மோஹத்தை நாம் எடுத்தெறிந்தோமானல், அந்த நிமிஷத்திலேயே - ஜனசக்தி, உலக சக்தி,—கிராமம் கிராமமாக பரவிக்கிடக்கும் ஜன சக்தி தென்படும். நாம் எந்த புரட்சியின் பெயரால் இந்தியாவிலும், உலகம் பூராவும் கூச்சலிட்டு வருகிறோமோ, அந்த புரட்சி பிரத்தியக்ஷமாகிவிடும். இம்மாதிரி ஒரு புரட்சியை செய்ய நாம் இன்று இங்கே கூடியிருக்கிறோம்.

உழைப்பின் காணிக்கை.

நூல் காணிக்கை வசூல் சென்ற வருஷம்தான் ஆரம்பித்தோம். ஆனல் எல்லா இடமும் பரவிவிட்டது. ஒவ்வொருவரும் 4 வருஷக் குழந்தையில் இருந்து 80 வருஷ கிழவன் வரையில் தன் கையாலேயே நூற்ற நூலை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். எங்களுக்கு பணம் தேவையில்லை. உழைப்பே தேவை என்று எல்லா இடமும் முழங்கச் செய்ய

கிராம ஸ்வராஜ்யத்திற்கு அஹிம்சா புரட்சி.

சர்க்கா சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீ தீரேந்திர மஜும்தார், இப்பொழுது தமிழ் நாட்டில் காந்திய அஹிம்சா புரட்சித் தத்துவத்தை விளக்க சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். திருப்பூரில் கதர் அன்பர்களின் கூட்டம் மார்ச் 8-உ காலை நடந்தது. அப்பொழுது ஸ்ரீ மஜும்தார் பேசியதின் சாரம்.

காந்திஜி, ராட்டையை சுயராஜ்யத்தின் சின்னமென்று சொல்லி வந்தார். ஸ்வராஜ்யமும் கிடைத்து விட்டது, வெள்ளையர்களும் வெளியேறி விட்டார்கள்; இன்னும் ராட்டையேன்? என்று நமது நண்பர்கள் கேள்விகள் கேட்கிறார்கள். முதன் முதலில் ராட்டை சுற்றுவதற்கு பல காரணங்கள் இருந்தன. சுரண்டலற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவது காந்திஜியின் அடிப்படை கொள்கையாக இருந்தது. காங்கிரஸும் ராட்டையை ஏற்றுக் கொண்டது, ஆனால் காந்திஜியின் நோக்கத்திற்கும், காங்கிரஸின் நோக்கத்திற்கும் அடிப்படையான பலவித்யாசங்கள் இருந்தன. காங்கிரஸில் மூன்று வகையினர் இருந்தனர். காந்திஜியின் பொருளாதாரக்கருத்தை ஆதரித்து, கதர் மூலம் வெளிநாட்டுத்துணியை பகிஷ்கரிப்பதற்கு ராட்டையை ஒரு சாரார் ஏற்றுக்கொண்டனர். 2-வது வகைப்பட்டவர் முதலாளிகள். இவர்கள் ஆங்கில ஆட்சியை ஒழித்துக் கட்டவே ராட்டையை ஆதரித்தனர்.

(முன்பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டும். நாம் உழைப்பு தேவதையை உபாசனை செய்ய வேண்டும். இந்த கோஷமே இந்தியாவில் எங்கும் பரவட்டும். "எவ்வளவு சிட்டம் உங்களுக்கு வேண்டும், உங்கள் எண்ணப்படி எவ்வளவு நூல் சேர்க்கவேண்டும்" என்று என்னிடம் கேட்கப்படுகிறது. 4 வயதிலிருந்து 79 வயதுவரை எவ்வளவு ஜனங்கள் இருக்கிறார்களோ, அவ்வளவு பேரும் ஒரு சிட்டம் வீதம் எனக்கு கொடுக்கட்டும். வருஷத்திற்கு ஒரு சிட்டம் என்பது சிரமமான காரியமல்ல, அது அன்பின் அடையாளம். ஆனால் இந்த அன்பு, சத்தியத்திற்காக—ஸர்வோதயத்திற்காக -- உழைப்பிற்காக மக்களுக்காக எவரது மனத்தில் உணர்ச்சி எழுகிறதோ அவர்கள் ஒரு சிட்டம் கொடுக்கட்டும். நமது தேசத்திலுள்ள மக்களுக்கு நாம் ஒவ்வொருவரும் இந்தச் செய்தியை எடுத்துச் சொல்ல வேண்டும் என விரும்புகிறேன். எனது இந்த வார்த்தைகளை எவ்வளவு தூரம், தங்களுடைய நடத்தையால் பரப்ப முடியுமோ, அவ்வளவு தூரம் பரப்புங்கள், இதுவே எனது கோரிக்கை.

உண்மையில் இந்த வேண்டுகோளுக்கே அவசியமில்லை. என்னைக் கொண்டு உங்கள் விருப்பத்தை சொல்ல வைக்கிறீர்கள் என்று நான் முதலிலேயே சொன்னேன். இல்லாவிட்டால் இப்படிக் கூற என்னிடம் இந்த சக்தி எங்கிருந்து வரும்? அந்த சக்தி உங்களிடம் எப்படி வந்தது? அது மகாத்மா காந்தியின் சங்கல்பத்தின் சக்தியே. மகாத்மாவிடம் கூட அது எங்கிருந்து வந்தது? அது அந்த பரமேஸ்வரனின் சக்தியே. எனது நண்பர்களே, போகலாம்; நாம் எல்லோரும் அவன் திருவடிக்கு செல்வோம். நமது அகம்பாவத்தை விட்டு விட்டு உழைப்பில் ஈடுபடுவோம்.

சர்வோதயம்—பிப். 51.

3-வது வகையினர் பரோபகாரிகள் என்ற சாதாரண ஊழியர்கள். இவர்கள் கொள்கை, ஆங்கிலேயர்களுடன் சண்டையிடுவது. இவர்களில் பெரும் பாலர் ஏழைகள். அவர்கள் ராட்டை மூலம் பொதுஜனத்தொடர்பு வைத்துக் கொண்டார்கள். கதரை தேசிய உடை யாகவும் கருதினர். வெள்ளையர் வெளி யேறியபின்னர் பொதுஜனத்தொடர்பை யும் நிறுத்திவிட்டனர். அந்நிய ஆடை பகிஷ்காரமும் நின்று விட்டது. இப் பொழுது இரண்டு விஷயங்கள் பாக்கி யாகிவிட்டன. 1. சுரண்டலற்ற சமு தாயம் அமைப்பது. 2. ஏழைகளுக்கு நிவாரணம். இவை இரண்டையும் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

1945-ல் காந்திஜி முதல் விஷயத்தை சுரண்டலற்ற சமுதாய நிர்மாண வேலையை பொதுஜனங்களின் முன் வைத்தார். உலகில் சுரண்டலற்ற சமு தாயம் ஏற்பட்டால் ஏழைகளும் பணக் காரர்களும் என்ற பாகுபாடு இருக்க முடியாது. பிறகு நிவாரண வேலை யாருக்கு எதற்காக என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். வேலையில்லாமை யும், ஏழ்மையும் வியாதிகள் அல்ல. நிவாரணம் அதற்குரிய மருந்துமல்ல. சுரண்டலின் அறிகுறியே வேலையில்லா மையும், ஏழ்மையும். ஒரு மண் முட்டு ஏற்படுத்த வேண்டுமானல் எங்காவது ஒரு குழி தோண்டித்தான் ஆக வேண்டும். ஆகையால் பணக்குவியல் ஓரிடத்தில் ஏற்படும்போது வேருெரு இடத்தில் ஏழ்மையும் கூடவே ஏற்படும். உலகில் இன்று 2 வகுப்புகள்தான் உள் ளன. ஒன்று சுரண்டுகிறவர், இரண்டா வது சுரண்டப்படுகிறவர்; ஒருவர் உற் பத்தி செய்து பட்டினி கிடக்கிருர், ஆனல் மற்றவர் உழைக்காமல் உண்ணு கிருர். உற்பத்தி செய்வோர் சாப்பாடுக்கு கூப்பாடுபோட வேண்டி யிருக்கிறது. இவர்களை ஹிந்தியில் (மஜூர் ஹுஜூர்) (தொழிலாளி, முதலாளி) என்பார்கள். தொழிலாளி வர்க் கத்தை முதலாளி வர்க்கம் சுரண்டுகிறது. 100 ரூபாய்க்கு ஒரு ஏழை உற்பத்தி செய்யுமிடத்தில் அவனுக்கு 20 ரூபாய் கொடுத்துவிட்டு 80 ரூபாய் முதலாளிகள் சுரண்டுகிருர்கள். உற் பத்தி செய்யும் ஏழையின் சம்பாத்தி யத்தை இவர்கள் பிடுங்கி எடுக்கிருர்கள். இப்படி 80 ரூபாய் பிடுங்கி எடுப்பதில் 10 ரூபாய் நிவாரண வேலைக்கு கொடுக் கின்றனர்.

வேலையில்லா திண்டாட்டமும், ஏழ் மையும் போக்க ஆங்கில ஆட்சியால் முடியாது, ஏனெனில் ஆங்கிலேயர் களே இந்தியாவை சுரண்டிக்கொண்டே இருந்தனர், அன்று நமக்கு அவர்களு டன் சண்டையிட வேண்டியிருந்தது. இன்று ஆங்கிலேயர்கள் சுரண்டுபவர் களல்ல. இன்று இங்குள்ள மத்ய வகுப்பினரும் முதலாளிகளுமே சுரண்டு கிருர்கள். இந்த சுரண்டல் செய்கிறவர் கள் ரூபாய்க்கு அல்ப அரை அணு நிவா ரணம் என்ற பெயரில் கொடுத்து நடத்துகிருர்கள். இனி, இப்படி நடக்க நாம் அனுமதிக்கக்கூடாது. இப் பொழுது புரட்சி யுகம் ஆரம்பமாகியிருக் கிறது. அப்படியே ராட்டையின் வேலை யும் புரட்சிகரமாக மாறியிருக்கிறது. இன்று சுரண்டலை எப்படி ஒழிக்கலாம் என்பதே ராட்டையின் பிரச்னை.

இரண்டு பூனைகளுக்கிடையில் அப்பத் துண்டை பங்கிட்டுக் கொள்வதுபற்றி சர்ச்சை ஏற்பட்டதால் மத்யஸ்தம் செய்யவந்த குரங்கு அப்பத்துண்டை

தின்றுவிட்ட கதை உங்களுக்குத் தெரியும். அப்பத்துண்டை சம்பாதித்த பூனைகள் உழைப்பாளிகள். அப்பத்துண்டைத் தின்ற குரங்கு உழைக்காமல் உண்ணும் ஆளும் வர்க்கம்.

இந்த ஆளும் வர்க்கம் எப்படி தோன்றியது என்பதை ஆராய்வோம். ஆரம்ப காலத்தில் உலகத்தில் எல்லோரும் உற்பத்தியாளர்களாக இருந்தனர். இப்படி இருக்கையில் இவர்களுக்குள் சிறிய சண்டைகளும், மனஸ்தாபங்களும் ஏற்பட்டன. ஆகையால் அமைதியைக் காத்து நியாயம் வழங்க அரசர் தோன்றினார். இதிலிருந்து ஆளும்வர்க்கம்தோன்றியது எனலாம். அதற்குப் பின் மந்திரிகள், அதிகாரிகள், குமாஸ்தாக்கள் போன்ற ஆளும் வர்க்கம் அதிகரித்து வந்தது. மக்களுக்கு வேலையில் சோம்பல் ஏற்படவே வேலையைக் குறைக்க யந்திர சாலைகள் ஏற்பட்டன. பின்னர் உற்பத்தி குவிந்து விட்டது. ஆதியில் தாங்களே உற்பத்தி செய்தும், பண்ட மாற்றுதல் மூலமும் மனிதர்கள் தங்கள் தேவையை தாங்களே திருப்தி செய்து கொண்டார்கள். அன்று உழைப்பாளி, ஆளுபவர் 'என்ற' இருவரே இருந்தார்கள்.

பின்னர் யந்திரத்தின் மூலம் குவியல் முறையில் உற்பத்தி ஏற்பட்டபொழுது மூன்றாவது வர்க்கத்தின் தேவை ஏற்பட்டது. அதாவது உழைக்காமல் யந்திரம் உற்பத்தி செய்ததை வினியோகம் செய்யும் பெரிய முதலாளிகள். இப்படியாக உற்பத்தியாளர், ஆளுபவர், வினியோகிப்பவர் என 3 வகுப்புகள் தோன்றின. முதல் இரண்டு வகுப்பிலும் அதிக சம்பந்தம் இருந்தது. ஆனால் உற்பத்தியாளருக்கும் வினியோகிப்பவருக்குமிடையில் எவ்வித சம்பந்தமும் இல்லை. இதனால் புதிய பிரச்னை எழுந்தது. உற்பத்தி சாமான்கள் துர்வினியோகிப்பதைத் தடுக்க இன்ஸ்பெக்டர்கள் வேண்டியிருந்தது. உற்பத்தியும் வினியோகமும் அதிகமாகிக் கொண்டே போகப் போக நிர்வாகம் என்ற பெயரில் மத்திய வகுப்பு வளர்ந்து விட்டது. பின்னர் உற்பத்தி அதிகமானவுடன் வினியோகம் சிக்கலாயிற்று.

அரசாங்க செலவிற்காக சர்க்கார் வரி விதித்தது. குவியல் முறையில் உற்பத்தி அதிகம் ஆக ஆக சர்க்காருக்கும் வரவு அதிகமாயிற்று. சர்க்காரின் வருமானத்தை அதிகரிக்க குவியல் உற்பத்தி முறை அவசியமாயிற்று. இன்று வனஸ்பதி தடையைப் பற்றி சர்க்கார் சொல்லும் பதில் என்ன? வனஸ்பதியை தடை செய்வதால் சர்க்காருக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் என்கிறார்கள். மதுவிலக்கை நடத்தும் விஷயம் பற்றியும் இதையே தான் மற்ற மாகாண சர்க்கார்களும் சொல்கிறார்கள். வினியோகம் செய்யும் வர்க்கத்தில் இரு பிளவு ஏற்பட்டது. ஒன்று பெரிய முதலாளி, இரண்டாவது குட்டி முதலாளி. இந்த இரு வர்க்கத்தினரும் உழைக்காமல் உண்ணும் வர்க்கத்தினர். உற்பத்தியை குவித்தனர். இதை செலவழிக்க உபாயம் கண்டு பிடித்தனர். குவியல் முறை உற்பத்திக்கு தொழிற்சாலைகளின் தேவை ஏற்பட்டது.

தொழிற்சாலைநிர்வாகத்திற்கு ஆட்கள் தேவை. இதற்காக சிறிய பள்ளிகள் ஏற்பட்டன. கரும்பு-சர்க்கரை ஆலைகளைப் பாருங்கள்! அங்கே படிப்படியாக தொட்டியில் கறுப்பு நிற கரும்புச்சாறு

கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு தொட்டியிலும் வெளுப்பாகி, கடைசியில் பூராவும்வெளுத்த சர்க்கரையாக ஆகிறது. இதைப் போலவே ஆரம்பத்தில் நமது ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் கிராம மாணவர்கள் முதலில் அசுத்தமாக கறுப்பாக இருந்தார்கள். மிடில் ஸ்கூல் மாணவரான உடனே சிறிது வெளுத்து நாகரீக மனப்பான்மை அடைகிறார்கள். ஹைஸ்கூலில் அதிக நாகரீகம்; பிறகு காலேஜில் B. A. பட்டம் வாங்கும் பொழுது பூரா வெளுத்த சட்டை, டை, ஹாட், பவுடர் முதலியவைகளுடன் பூரண நாகரீக மனிதனாக வெளிப் படுகிறான். அவர்களிடத்தில் உற்பத்தியை நிர்வகிக்கக் கூடிய சக்தி மட்டும் இருக்கும். உங்களுக்கு பஸ்மாசூரன் கதை தெரியுமென நினைக்கிறேன். பஸ்மாசூரன் தவம் செய்து, தொடுபவர்களை பொசுக்கிக் கொல்லும் வரம் பெற்றான். அதோடு நிற்கவில்லை. வரம் கொடுத்த பரமேஸ்வரன் தலையில் கை வைத்து பொசுக்க விரும்பினான்.

அதைப்போல முதலாளிகள், குட்டி முதலாளிகளை, மத்தியவர்க்கத்தினரை சிருஷ்டித்தார்கள். ஆனால் இன்று அதே மத்திய வர்க்கம் முதலாளிகளை ஒழித்துக் கட்ட எல்லாவற்றையும் தேசியமாக்கும் கொள்கையை ஆரம்பித்திருக்கிறது. இதற்கென்ன அர்த்தமென்றால், ஒரு பொருளின் விலை 1000 ரூபாய் என வைத்துக்கொள்ளுங்கள். அதன் உற்பத்தி செலவு 600 ரூபாய், லாபம் 400 ரூபாய், முதலாளிகளுக்கு ரூபாய் 200-ம், வினியோகஸ்தர்களுக்கு ரூபாய் 200-ம் கிடைக்கிறது. இவைகளை தேசியமாக்கினால் முதலாளிகள் மறைந்து போவார்கள். அப்பொழுது இந்த 400 ரூபாய் லாபமும் வினியோகஸ்தருக்கே கிடைக்கும். தனிப்பட்ட முதலாளிகள் 4 பேர்களைக் கொண்டு நடத்தும் வேலையை அரசாங்கம் 8 பேர்களை வைத்துக்கொண்டு நடத்த வேண்டியிருக்கும். ஆலைகளை தேசியமயமாக்கும் கோஷம் பெரிய முதலாளிகளுக்கும் சிறிய முதலாளிகளுக்குமிடையே உள்ள தகராறுதான். தேசியக்கொள்கையாலும் உழைப்பாளிக்கு கிடைக்கக்கூடியது அதே 600 ரூபாய்தான்; 400 ரூபாய் மத்யவர்க்க குட்டி முதலாளிகளுக்கே கிடைக்கும். ஆகையால் இதனால் சுரண்டலை ஒழிக்க முடியாது; இதனால் பெரிய முதலாளியை, குட்டி முதலாளியாக மாற்றுவதுதான் முடியும். ஆகையால் இந்த வினியோக முறை மாற வேண்டும். நிர்வாக முறை மாறுவதால் சுரண்டல் ஒழியாது என காந்திஜி கூறினார். உழைப்பாளி வர்க்கத்தை காப்பாற்ற வேண்டுமானால் அவர்கள் முதலாளிகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தடுக்க வேண்டும். காந்திஜி ஆங்கில ஆட்சியை ஒழிக்க இந்தியர்களிடம் ஒத்துழையாமை இயக்கம் நடத்தச்சொன்னார். ராட்டை இதற்குத் தகுந்த சாதனம். ஆகையால் காந்திஜி சர்க்கா சங்கத்திடம், இந்த ராட்டை மூலம் பூர்ண சுயதேவை வேலையை பரப்பச்சொன்னார். கதர் ஊழியர்கள் வஸ்திர சுயதேவையை ஏற்றுக்கொண்டனர். காந்திஜி ராட்டையை சூரியன் என்றும், மற்ற நிர்மாண வேலைகளை நட்சத்திரம் என்றும் கூறினார். முக்கியமாக கிராம ஸ்வராஜ்யம் அமைப்பதே நமது ராட்டையின் வேலை.

நமது திட்டத்தின்படி முதன் முதலில் தங்கள் தேவைக்கு சுயதேவை பூர்த்தி செய்துகொள்ளும் உழைப்பாளிகளின் தலைமையை ஸ்தாபிக்க வேண்டும்.

ஆனல் உழைப்பாளி வர்க்கம் படுத்துறங்குகிறது. தங்கள் நிலைமையை உணர்ந்து கொள்ளவும், முதலாளிகளுடன் போராடவும் சக்திஇல்லை. மத்திய வர்க்கத்தினரான குட்டி முதலாளிகள் உழைப்பாளிகளின் பலஹீனத்தை பயன் படுத்திக்கொண்டு அவர்களுக்கு வழி காட்டுவதற்காக தலைவர்களாக முன் வருகிறார்கள். "ஏழைத்தொழிலாளிகளே, உங்களுக்கு சக்தி இல்லை, உங்களுக்காக நாங்கள் தலைமையை ஏற்று முதலாளிகளுடன் போராட்டத்தை நடத்துவோம்" என்று சொல்கின்றார்கள். பின்னல் போராட்டம் நின்ற உடன் குட்டி முதலாளிகளுக்கு தலைமைப்பதவியும் அந்தஸ்தும் கிடைத்து விடுகிறது. மத்ய வகுப்பு பலப்பட்டு வளர்ந்து விடுகிறது. யாருடைய விடுதலைக்காக புரட்சி ஏற்பட்டதோ அவர்களின் நிலைமை முன் போலவே இருந்துவிடுகிறது. ஆகையினல் உழைப்பாளிகளின் புரட்சிக்கு உழைப்பாளிகளின் தலைமையே அவசியம். அவர்களின் தலைமையை ஸ்தாபிக்க மத்திய வகுப்பினர் ஒரு வழிகாட்டியாக மட்டும் இருக்கலாம். உழைப்பாளிகளிடமே தலைமையும் அதிகாரமும் இருக்கும்படி விட்டு விடுவது நம்முடைய கடமை என்று காந்திஜி நமக்குச் சொன்னர்.

இம்மாதிரி 7 லட்சம் கிராமங்களிலும் கிராமவாசிகளின் தலைமையில் 7 லட்சம் சிறிய சிறிய நூற்பு சங்கங்கள் ஏற்படுத்த சர்க்கா சங்கம் முன் வந்திருக்கிறது. இந்த சங்கங்களை **கதாயிமண்டல்** என்று அழைக்கிறோம். ஆகையால் முதலில் சுயதேவைக்கு உழைப்போரின் தலைமை ஏற்படவேண்டும். பிறகுவாழ்க்கைக்கு அவசியமான பொருள்களின் சுயதேவை, பிறகு நிர்வாக—வினியோகத்தில் (Administration-distribution) சுயதேவை ஏற்படல்வேண்டும். இந்த முதலாளிகள் சந்தர்ப்பத்தின் நிர்பந்தம் காரணமாக தானகவே மறைந்து விடுவார்கள். இதற்குத்தான் அஹிம்சைப்புரட்சி (Non-violent revolution) என்று சொல்லுவார்கள்.

இதன் திட்டம், உத்தேசம் இவைகளை கதாயிமண்டல்கள் தீர்மானிக்கும். ஒவ்வொரு கிராமவாசியும் என்ன செய்ய வேண்டும் என்றும் கதாயி (நூற்பு)மண்டல் விபரமாக ஆராய்ச்சி செய்யும். கீழ்க்கண்டவை முக்கியமாக இருக்கும். 1) ஸ்தலத்திற்கு அவசியமான பொருள்கள் உற்பத்தி செய்தல். 2) எல்லா மில் சாமான்களையும் பகிஷ்கரித்தல். இம்மாதிரி 7 லட்சம் கிராமங்களில் சாத்வீக புரட்சி செய்தால் குவியல் முறையும், நிர்வாகக் குவியலும் நீங்கிவிடும். முதலாளிகள் சுரண்டும் நூற்றுக்கு 80 ரூபாயை திருப்பி வாங்குவதல்ல; 80 ரூபாயிலிருந்து ஒரு பைசா கூட சுரண்ட விடாமல் செய்வதே நமது நோக்கம் என்று 1945-ல் காந்திஜி சொன்னர்.

காந்திஜியே இந்த புரட்சியைச் செய்வார் என எண்ணினோம். காந்திஜிக்கு பிறகு அஹிம்சா புரட்சி வேலையை நாமே செய்யவேண்டும். இந்த வேலையை ஆரம்பிக்கும்பொழுதுபெரிய புயல் உருவாகும். கதர் மூலம் நிவாரண வேலை 25 வருஷங்களாக நடந்து வந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன், கிருஸ்தியன் மிஷன் போன்ற ஸ்தாபனங்கள் நிவாரண வேலை செய்து வருகின்றன. அவர்கள் மிஷன் வேலைக்காக முதலாளிகள் சுரண்டும் பணத்திலிருந்து ஒரு பாகம் தானம் வாங்குகின்றனர். ஆயிரம் வருஷங்களாக முதலாளிகள்

சுயதேவைக்கு பருத்திப் பிரசினை.

தேசத்தின் பிரிவினையினால் ஏற்பட்ட பிரசினைகளில் பருத்திப் பிரசினை ஒன்று. முன்னால் தேசத்தின் உற்பத்தி 48 லக்ஷம் பேல்கள் பஞ்சு. இப்பொழுதுள்ள இந்தியாவின் 30 கோடி மக்களுக்கு ஒவ்வொரு வருக்கும் சராசரி 16 கெஜம் வீதம் துணிக்கு 40 லக்ஷம் பேல் பஞ்சு வேண்டும். பற்றாக் குறையை சமாளிக்க குடியானவர்கள் அதிகமாக பருத்தி சாகுபடி செய்யத் தூண்டுவதற்கு பஞ்சின் விலையை சர்க்கார் ஏற்றி விட்டார்கள். இதனால் உணவு பிரசினை தீர மேலும் கஷ்டம் ஏற்படாதா? மேலும் நம்மிடம் சணல் போதுமானதாக இல்லை. சர்க்கரை போதாது. சர்க்காரில் உள்ளவர்கள் தங்கள் தங்கள் இலாகா சம்பந்தமானதை மட்டும் அதிக சாகுபடி செய்யச்சொல்கிறார்கள். பாவம்! ஏழைக் குடியானவன் தன்சொற்ப நிலத்தில் எதைத் தான் சாகுபடி செய்வது? மாட்டுக்கு மேய்ச்சல்காடு போதாது. பசு சம்ரக்ஷணைக்கு வழி இல்லை. பசு சம்ரக்ஷணை இல்லா விட்டால், உழவுக்கு வேண்டிய எருதுக்கும் கஷ்டம். மனிதனுக்கு வேண்டிய பாலும் குன்றிவிடுகிறது. இந்தியாவில் மாட்டுக்கு கீர்த்தி பெற்ற மத்திய பாரதத்தின் நிலைமையைப்பார்த்தால் நாட்டின் பசு, எருது செல்வம் எப்படி குன்றி விட்டது என்பது விளங்கும். "உணவு உற்பத்தியைப் பெருக்கு" என்று சொல்வது மட்டும் போதாது. பசுவும் எருதும் இப்படி ஒரு புறம் அழிந்து போக பஞ்சின் பண விலையை மட்டும் அமெரிக்க மார்க்கெட்டைப் பார்த்து ஏற்றுவதினால் விவசாயிக்கு என்ன பயன்?

இந்தியாவில் நீள துசும்பு பருத்தி விளைவதில்லை. அமெரிக்காவிலிருந்து தருவித்து டாலர் தேக்கத்தை செலவிட வேண்டும். இதற்காக நீள துசும்பு பஞ்சு சாகுபடி செய்யச் சொல்லுகிறார்கள். நம்தேசத்து பருத்தித் துசும்பை

(முன்பக்கத்தின் தொடர்ச்சி)

சுரண்டும் நூற்றுக்கு 80 ரூபாயில் 10 ரூபாய் நன் கொடை அளித்து வருகிறார்கள். ஆனால் காந்திஜியின் நிவாரண வேலை இப்படிப் பட்டதல்ல, கிராம மக்களின்-உழைப்பாளிகளின் 80 ரூபாய் அடியோடு சுரண்டப்படாமலிருந்தாலே அது பெரிய விடுதலையாகும். 80 ரூபாயிலிருந்து ஒரு பைசா கிராமத்தின் வெளியே போகக்கூடாது. நிர்வாகமும், வினியோகமும் மூலமே இப்படி சுரண்டப் படுகிறது. எந்த எல்லை வரை நிர்வாக-வினியோக முறைகளை மாற்ற முடியுமோ, அவ்வளவு நாம் மாற்ற வேண்டும், இப்பொழுது நடந்து வரும் நிவாரண கதர் வேலையினால் நூற்றுக்கு 80 ரூபாய் சுரண்டுவோரின் லாபம் 70 ரூபாயாக குறையலாம். நாங்கள் இதைக்கண்டு திருப்தியடைய மாட்டோம். 10 ரூபாய் போனாலும், கிராம மக்களின் 70 ரூபாயை மீட்கவே நாங்கள் முயற்சிப்போம். இதுதான் சர்க்கா சங்கத்தின் புதிய புரட்சித் திட்டம். ஆகையால் சர்க்கா சங்கம் கதாயி மண்டல்கள் மூலம் கிராம சுதந்திரத்தை ஸ்தாபிக்க விரும்புகிறது. பொருளாதார ஜனநாயகத்தை ஏற்படுத்துவதே சர்க்கா சங்கத்தின் நூற்போர்களின் லக்ஷியம்.

திட சித்தத்தின் மூர்த்தி - பாபு.

ஆச்சார்ய விநோபாஜி ஜனவரி 30உ ஸர்வோதய தினத்தில் பேசியது.

இந்த சம்பவம் நடந்து இன்றுமூன்று வருடங்கள் ஆகிவிட்டன. அன்று இருந்ததைப் போலவே இன்றும் அந்த எண்ணம் நம்முடைய ஹிருதயங்களில் புதிதாக இருக்கின்றது. ஒரு எண்ணத்தின் விதை (கருத்து விதை) விதைக்கப் பட்டது. அதற்கு உத்தமமான பலி என்ற உரமும் கொடுக்கப்பட்டது. அதன்மேல் "ஹரியின் பெயர்" என்ற மழையும் பெய்திருக்கிறது. இந்நிலைமையில் அந்த விதை முளைவிடாமல் இருக்க முடியாது. அவ்விதை முளைவிட்டுக் கொண்டிருக்கிறது. நீண்டகால மகத்துவம் பொருந்திய எண்ணங்களெல்லாம் மெதுவாகத்தான் வளர்ச்சியடைகின்றன. நீண்டகால எண்ணங்களல்லாதவைகள் புற்களைப் போன்றுவளர்ந்து அவைகளைப்போன்றே க்ஷீணமாகி விடுகின்றன. இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்னால் விதைத்த புத்தபகவானின் "கருத்தில்" இன்று பலமுள்ள கிளைகள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் பார்த்தோம். நமது ஹிந்து இந்திய சித்தாந்தங்களிலிருந்து தான் இந்த புத்தாவதாரம் நடந்துகொண்டிருக்கிறது.

(முன்பக்கத்தின் தொடர்ச்சி)

விட அந்நிய நாட்டு பருத்தித் துசும்பு பலக் குறைவு. அதனால் அதில் உண்டாகும் துணி வலுக்குறைவுள்ளது. சீக்கிரம் துணி கிழியும். ஆதலால் தற்சமயம் உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும் சராசரி 16 கெஜத்திற்குப் பதிலாக 12 கெஜமாக குறைந்துவிடும். இதனால் குவியல் முறையில் ஆலைகளில் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக சுயதேவைக்காக பரவல் முறையில் எங்கும் உற்பத்தி செய்வது அவசியமாகும். நமக்கு பஞ்சு பற்றுக் குறையை கீழ் கண்டவாறு தீர்க்கலாம்.

1. உணவுக்கும், மேய்ச்சலுக்கும் பூமியை விட்டு விட்டு பாக்கியை உபயோகித்தல்.

2. வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் சாகுபடி செய்யாமல் சுயதேவைக்காக வீட்டுப் புறம், கொல்லைப் பக்கம், எல்லாப் பக்கமும் பருத்தி சாகுபடி செய்தல்.

3. யந்திர சக்திக்குப் பதிலாக எருதுகள் போதாவிட்டால் மனித சக்தியை உபயோகித்து நல்ல கூலி கொடுப்பது.

4. எல்லா பூமிக்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஏற்ற பஞ்சு சாகுபடி செய்வது.

5. துணி மிருதுவாகவும், திடமாகவும் இருக்கத்தகுந்த பருத்தியை சாகுபடி செய்யவேண்டும்.

6. தற்பொழுதுள்ள பொருளாதார நிலைமையில் விவசாயி சுலபமாகவும், லாபகரமாகவும் சாகுபடி செய்யக்கூடிய பருத்தி ரகங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

7. முக்கியமாக பண மோகத்தில் அகப்பட்டுக்கொள்ளாமல் தங்கள் சுயதேவைப்பூர்த்திக்காக உழைக்கும் லக்ஷியத்தை மேற்கொள்ள வேண்டும்.

(16–9–'50 'ஹரிஜன்' பத்திரிகையில் வந்த ஸ்ரீ தாதாபாய் நாயக் கட்டுரையின் சுருக்கம்.)

இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்குப்பிறகு புத்தபகவானின் பிறந்த தினங்கள் கொண்டாடப் படுகின்றன. ஸ்ரீ கிருஷ்ண பகவானின் நிலைமையும் அதுவேதான். பகவானின் கீதையில் விதைத்த விதை இப்பொழுது பல மடைந்து வருகிறது. இன்று இந்தியா முழுவதிலும் ஒவ்வொருவரிடத்திலும் கீதையை நீங்கள் பார்க்கலாம், படித்தவர்களின் கவனமெல்லாம் கீதையின் பக்கம் செல்கிறது. கீதையின் மேல் இவ்வளவு கவர்ச்சி மத்திய காலத்தில் இருக்கவில்லை. கீதை எப்பொழுதும் பூஜிக்கத் தகுந்ததாக இருந்து வந்திருக்கிறது. ஆனல் இன்று அது நமது வாழ்க்கைக் குரிய சாதனமாகி விட்டது. யேசுகிருஸ்துவின் நிலைமையும் இம்மாதிரிதான் ஆகிக்கொண்டிருக்கிறது. அவர் சொல்லிய விஷயம் பெரிய அளவில் இன்று பரீக்ஷிக்கப்படுகிறது. இந்த உலக யுத்தங்கள் முழுவதும் என்ன? ஒருவிதத்தில் யேசுகிருஸ்துவின் உபதேசத்தை பரீக்ஷிக்கும் முயற்சிகளே. இன்று யாராவது சிந்தனையாளர் சிந்தனைசெய்ய ஆரம்பித்தால் அவர் ஒரு சிறிய தேசத்தைப் பற்றி மட்டும் சிந்தனை செய்வதில்லை, உலகமுழுவதையும் பற்றித்தான் சிந்தனை செய்கிருர். பத்திரிக்கைகளில் உள்நாட்டுச் செய்திகளைக் காட்டிலும் வெளிநாட்டுச் செய்திகள் குறைவாக வருவதில்லையென்பதையும், ஜனங்கள் தங்கள் நாட்டுச் செய்திகளை எவ்வளவு ஆர்வத்துடன் படிக்கிருர்களோ அவ்வளவு ஆர்வத்துடனேயே வெளிநாட்டுச் செய்திகளையும் படிக்கிருர்கள் என்பதையும் நீங்கள் பார்க்கிறீர்கள். உண்மை என்னவெனில் நம் நாடு, வெளிநாடு என்பது ஒரு கற்பனை அளவே என்றும் அதில் சாரமில்லையென்றும் நம் மக்கள் அறிந்து கொண்டார்கள். எல்லாம் பகவானுடைய பூமியே. மனித சமூக முழுவதும் ஒன்றே. மேலும் எப்போதாவது ஒரு சமயம் எல்லோரும் ஒன்ருகத்தான் ஆகவேண்டும். இம்மாதிரி பரவிய லோக சிந்தனை ஒவ்வொரு வருக்கும் ஏற்பட்டால் இதைத்தவிர வேறொரு யோசனையும் தோன்ருது. ஆயுதங்களைக் கொண்டு யுத்தம் நடைபெற்ருலும் அவைகளெல்லாம் நான் சொன்னதைப் போன்று அஹிம்சை உபயோகத்தின் ஆராய்ச்சிகளே; மனிதனை பலமாக அஹிம்சையின் பக்கம் அழைத்துச் செல்வதற்காக இருக்கின்றன. சிறிய சிறிய சண்டைகள் சச்சரவுகளெல்லாம் குறுகிய எண்ணங்களால் உற்பத்தியாகின்றன. அவைகளால் ஹிம்சை நசியாமல் வளர்கிறது. பரவிய சிந்தனை செய்யும் போது அறிவுக்குறைவால் அந்த எண்ணத்துடன் ஹிம்சை சேர்ந்து விட்டால் அந்த ஹிம்சை தானகவே க்ஷீணமாகிவிடும். மகாத்மா காந்திஜீயின் தலைமையில் பாரத தேசம் எந்த ஆயுதத்தை பலவீனத்துடன் உபயோகித்ததோ அதை இந்தியாவின் மூலம் உலகத்தில் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று பகவான் விரும்புகிருர் போலும்; அப்படியே தான் செய்து கொண்டிருக்கிருர் என்பது எனது எண்ணம். இப்பொழுதுதான் இந்தியாவின் தார்மீகம் சம்பந்தமான குரல் உலகத்தில் எட்டுகிறது. உலகத்தாரால் இந்தியாவின் கொள்கை கேட்கப்பட்டு அதைப் பற்றி சிந்தனையும் செய்யப்படுகிறது. இக்கொள்கைகள் அமல் நடத்தப் படாவிட்டால், சிந்தனையாளர்கள் இந்தியாவின் கொள்கையை இவ்வாறு புறக்கணிப்பதால் உலகத்திற்கு ஆபத்துத்தான் என்பதை அறிந்து கொள்கிருர்கள். இவைகளெல்லாம்

காந்திஜீயின் சிந்தனையின் நிழல் என்பதை நான் பார்க்கிறேன். அந்நிழலே வேலை செய்துகொண்டிருக்கிறது. கருத்து அரைகுறையாக மூடப்பட்டிருக்கிறது. அது முளை விட்டு நன்ருகப் போஷிக்கப்படவேண்டியிருக்கிறது. இந்தியா முழுவதிலும் காந்திஜீயின் கொள்கைகளை அமல் நடத்த வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகுதான் அக்கொள்கைகள் உலகத்தில் பிரவேசிக்கும். ஆனல் அந்நிழலின் செல்வாக்கு பரவிக்கொண்டிருக்கிறது. ஆகையால் நாம் பொறுமையோடு இருக்கவேண்டும். மூன்று வருடங்களாகிவிட்டனவே காந்திஜீயின் கருத்துக்கள் எங்கேனும் அமல் நடத்துவது காணப்படவில்லையே என்று சொல்லிவிடக்கூடாது. காந்திஜீயின் கொள்கைகளின் எந்த அம்சம் நமக்கு நல்லதென்று தோன்றியிருக்கிறதோ அதை எவ்வளவு தூரம் நாம் அமல் நடத்த முடியும் என்பதைக் காண நாம் அவசரப்படவேண்டும். நம்மை அக்கருத்தின் உறைகல்லில் பரீக்ஷிக்க வேண்டும். ஆனல் உலகத்திற்காக சற்று பொறுமையோடு இருக்க வேண்டும். அந்தக் கருத்து எங்கு வேலை செய்துகொண்டிருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும்.

பெயர் பகவானுடையது, வேலை காந்திஜீயுடையது.

இந்தியாவில் நாம் எங்கு பார்த்தாலும், "காந்திஜியின் உபதேசத்தை மறந்துவிட்டோம்" என்ற சத்தத்தை கேட்கிருேம். ஆனல் இது தவறு. காந்திஜியின் கருத்தின் காரணத்தினுல் ஏற்படாத தவறுதலான ஒரு பொருளாதார ஏற்பாட்டின் முடிவுகளே இன்று காணப் படுபவைகள். இது பழைய காலத்திலிருந்து நடந்து வந்திருக்கிறது. அது இன்று தனது சாவை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. நமது சமூகம் முழுவதும் கீழே விழுந்து விட்டது, அல்லது சமூகத்தின் நீதி கெட்டு விட்டது என்று சொல்லுகிருேம், ஆனல் சமூகம் இம்மாதிரி கெட்டுப் போகவோ அல்லது கீழே விழுந்து விடவோ முடியாது. ஒரு வெள்ளம் வந்திருக்கிறது. அதில் ஜனங்கள் மூழ்கிக் கொண்டிருக்கிருர்கள். நாம் நமது கொள்கைகளில் ஸ்திரமாக இருந்து அவைகளை நம் கூட்டத்தில் அமல் நடத்த முயற்சிப் போமானல் ஹிம்சையின் முயற்சிகளெல்லாம் மறைந்து நமது எண்ணங்கள் முன்னேறும். ஆகையினல் சகோதரர்களே! இப்பொழுது உட்காரும் சமயமல்ல, வாதங்கள் புரியும் சமயமுமல்ல. இப்பொழுது உலகத்தில் நடைமுறையிலிருக்கும் தவறுதலான பொருளாதாரக் கொள்கைகளை நம் பலம் முழுவதையும் ஈடுபடுத்தி தீவிரமாக எதிர்க்கும் சமயம் வந்துவிட்டது. நமது, வாழ்க்கையையும், சிநேகிதர்கள், அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் வாழ்க்கையையும் தவறுதலான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து காப்பாற்றுவது தான் எதிர்க்கும் முறை.

சமூகத்தின் வெளவாமை:—

சர்வோதய சிந்தனைக்கும், பொருள் சேர்ப்பதற்கும் ஒற்றுமை ஏற்படுவதில்லை. சமூக வெளவாமையை அமல் நடத்தவேண்டும். நமது ஸ்தாபனங்களின் மூலம் இன்று என்ன வேலை நடந்து வருகிறதோ அதைக் காட்டிலும் அதிகமான வேலை நடக்க வேண்டியது அவசிய மிருக்கிறதென்பதை நமது ஸ்தாபனங்கள் உணரவேண்டும். நம் வேலைகள் முழுவதும் பணத்தின் ஆதாரத்தின் பேரில் நடக்காமல் உழைப்

பின் ஆதாரத்தின் பேரிலேயே நடக்க வேண்டும். இம்மாதிரி வேலை செய்யப் படுமானல் ஜனங்களின் மனதும், விசேஷமாக இளைஞர்களின் மனதும் இவ் வேலைத்திட்டத்திற்கு உற்சாகமாக இருக்கிறதென்பதை நான் அறிவேன். எனக்கு அதிகமான கடிதங்கள் வருகின்றன. அவைகளில் இளைஞர்களின் கடிதங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளில் உற்சாகம் அதிகம் காணப் படுவதை நான் என் அனுபவத்தினல் பார்த்துக் கொண்டிருக்கிறேன். விதைக்கப்பட்ட சிந்தனை விதையின் பலனை ஜனங்கள் தீவிர விருப்பத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள், என்பதுதான் அர்த்தம். நாம் நமது கடமையைச் செய்துகொண்டு காந்திஜி நம் முன் வைத்த எண்ணத்தை கருத்தில் வைத்து பகவானின் பெயரை உச்சரித்து அந்த எண்ணத்தில் திடமாக இருக்க வேண்டும். அந்த திடத்தின் சாக்ஷியை மூன்று வருடங்களுக்கு முன் உலகம் ஏறக்குறைய இதே சமயத்தில் பார்த்தது. அதிகமான ஜனங்கள் தன்னைக் காப்பாற்றுவதற்காக காந்திஜியின் பெயரை உச்சரிக்கிருர்கள். காந்திஜி தனது கடைசி காலத்தில் யாருடைய பெயரை உச்சரித்தாரோ, அவரின் பெயரை உச்சரிப் போமென்று சொல்லுகிறேன். ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டு வேலை செய்து கொண்டே போவோமானல் பரமாத்மாவின் கிருபையால் நம்மில் ஒவ்வொருவருக்கும் அந்த ஒளி கிடைக்கும்.

[இது பரந்தாம் ஆசிரமத்தில் காந்திஜி மறைந்த தினத்தையொட்டி ஜனவரி 30-ந்தேதி யன்று செய்த பிரார்த்தனைப் பிரசங்கம்.]

'சர்வோதயம்.' பிப்ரவரி '51,

★ ★ ★

சென்னை சர்க்காரும் சர்க்கா சங்கமும்,

(ஸ்ரீ கிஷோர்லால் மஷ்ருவாலா)

சர்க்கா சங்கத்தைப் பற்றி சென்னை சர்க்கார் சொல்லிய குறைகளுக்கு சர்க்கா சங்கத்தின் காரியதரிசி விடுத்த பதிலை ஹரிஜனில் 7-10-1950உயில் பிரசுரித்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். சென்னை சர்க்கார் 22-12-50ல் விடுத்த பிரஸ் அறிக்கை நெ. 223ஐ நாங்கள் பிரசுரிக்கவேண்டுமென்று விரும்புகிருர்கள். இரு பக்கங்களுக்கும் நியாயமாக அதையும், சர்க்கா சங்கத்தின் பதிலுடன் கீழே வெளியிடுகிறேம். ஆனல் பத்திரிக்கை மூலம் இந்த விவாதத்தை நடத்துவதால் ஒரு வித பயனுமளிக்காது என்று எனக்கு தோன்றுகிறது. முதலிலே இந்த விஷயம் பூருவிற்கும் ரிக்கார்டு உள்ளது. எந்தப் பக்கத்தில் குற்றம் இருக்கிறது என்று விசாரணை செய்வது அவசியமானல் ஒரு பாரபட்சமற்ற நீதிபதியின் அபிப்ராயத்தைக் கோருவது மிக உகந்ததாகும். இரு பக்கங்களின் அறிக்கைகளையும் நான் படித்தேன். வேறு நிலைமையில் வேறு கருத்தைக் கொண்டு ஸ்ரீ ஜாஜுஜி கூறிய நிலைமை இன்று இல்லை. அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கும் உத்தேசமில்லை. அப்படியிருக்க இதை சர்க்கார் சுட்டிக் காட்டுவது நியாயமற்றது என்று எனக்குத் தோன்றுகிறது. சர்க்கா சங்கத்தின் முயற்சிகளைப் பற்றி

கதருக்கு நூல் விதி ஏன்?

கேள்வி:— ஏன் சர்க்கா சங்கம் நூல் விதியை வற்புறுத்துகிறது. அத்தாட்சி பெற்ற ஸ்தாபனம் அதை ஒப்புக் கொள்கிறதா?

பதில்:— சர்க்கா சங்கத்தின் கொள்கைப்படி, சர்க்கா, சுயதேவைப் பொருளாதார தத்துவத்தின் சின்னம். ஆகையால் அது நூல் விதியை வற்புறுத்துகிறது. நூற்காமல் ஒருவரும் சுயதேவைப் பூர்த்தியாளராக முடியாது. இரண்டாவது காரணம், சர்க்கா சங்கம் உலகில் சுரண்டலற்றதும், வகுப்பு பேதமற்றதுமான ஒரு சமூகத்தை அமைக்க விரும்புகிறது. எவர் சமூகம் மூலம் செய்யப்படும் சாமான்களை உபயோகிக்க விரும்புகிருரோ அவர் உடல் உழைப்பின் மூலம் உற்பத்தியில் ஈடுபடவேண்டும். இல்லாவிட்டால் சமூகத்திலிருந்து சுரண்டலும், வகுப்பு வாதமும் விலக முடியாது. சர்க்கா சங்கம் நூல் விதியை ஏற்படுத்தி குறைந்தபட்சம் கதர் வட்டாரத்தில், எல்லோரும் கதர் உற்பத்தியிலும் சிறு பங்கு எடுக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறது.

ஒவ்வொரு கதர் ஸ்தாபனமும் சங்கத்தின் நோக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. ஏழைகளுக்கு நூற்பதன் மூலம் நிவாரண மளிக்கவே கதர் வேலை செய்யும் பல அன்பர்கள் உண்டு. அவர்களுக்கும் சர்க்கா சங்கம் அத்தாட்சி பத்திரம் கொடுக்கிறது. ஏனென்ருல் சங்கம் அவர்களின் சுத்தக்கதரை 'அத்தாட்சி பெற்றதாக' ஒப்புக்கொள்கிறது. கதரின் அடிப்படை கொள்கைகளை அமலுக்கு கொண்டுவரும் விஷயமாக

(முன்பக்கத்தின் தொடர்ச்சி)

சர்க்கார் குறை கூறுகிறது. சர்க்கா சங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டாமல் சர்க்கார் குறை கூறுவது உண்மையில் ஆதாரமற்றதாகும். பொதுஜனங்கள் சம்பந்தப்பட்டமட்டில் இனிமேல் கதர் திட்டத்தை எப்படி மேற்கொண்டு சர்க்கார் நடத்தப்போகிருர்கள் என்பது தான் அதி முக்கியமான விஷயம். குற்றம் யாருடையது என்பதைநிரூபிப்பதைவிட சர்க்கார் இனிமேல் என்ன செய்வார்கள் என்பது அதிக முக்கியமானதினுல் மக்கள் அதை அறிய சிரத்தையுடன் எதிர்பார்ப்பார்கள். இந்த விவாதம்அதிருப்தியையும், எல்லோரிடத்திலும் ஒரு ஏமாற்றத்தையும் உண்டு பண்ணுமே தவிர வேறு பலன் அளிக்காது. ராஜ்யத்தின் பொருளாதார அமைப்பில் கதருக்கு என்ன ஸ்தானம் சென்னை சர்க்கார் கொடுக்க உத்தேசித்துள்ளது என்றும் அதைஎந்த முறையில் நடத்துவது என்றும் சர்க்கா சங்கமும் பொதுஜனங்களும் எந்த அளவில் ஒத்துழைக்கவேண்டுமென்று விரும்புகிறதென்றும் சென்னை சர்க்கார் மீண்டும் கூறினுல் இந்த விவாதத்தைவிட அதிக பயன் தரக்கூடும். வாசகர்களின் சௌகரியத்திற்காக சர்க்கார் அறிக்கையின் ஒவ்வொரு பாகத்தையும் அதற்கு சர்க்கா சங்கத்தின் பதிலையும் சேர்ந்தாற்போல் பிரசுரிக்கிருேம்.

—ஹரிஜன், 3-3-1951.

குறிப்பு: சர்க்கா சங்கத்தின் பதில் சென்ற மாத கதர் மலரில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அத்தாட்சி பெற்ற ஸ்தாபனங்களில்.... ....அபிப்பிராயபேதம் இருக்கலாம்.

கேள்வி:- நகரவாசிகள் கதர் வாங்குவதின் மூலம் கிராமங்களுக்கு உதவி செய்கின்றார்கள். அவர்கள் கதர் வாங்காமல் இருந்து விட்டால் கதர் விற்பனையாகாமல் இருந்து விடுவதுடன், கிராமங்களுக்கு கிடைக்கும் உதவியும் நின்றுவிடும். இம்மாதிரி நிலைமையில் நூல் விதி நகரங்களில் வைப்பது சரியா? நகரவாசிகள் ஏன் நூற்கவேண்டும்?

பதில்:- சமூகத்தின் தற்கால நிலைமையில் நகரவாசிகள் கிராமவாசிகளை சுரண்டுகிறார்கள். கிராமவாசிகளை இந்த சுரண்டலிலிருந்து விடுதலை செய்வதே சர்க்கா சங்கத்தின் வேலை. சுரண்டப்பட்ட தனத்திலிருந்து ஒரு சிறிய பாகம் வாபஸ் செய்வது மட்டுமல்ல நமது வேலை. ஆகையால் நகரவாசிகள் கதர் வாங்கி கிராமவாசிகளுக்கு உதவிசெய்வதில், சங்கத்திற்கு எவ்வித விருப்பமுமில்லை. நகரவாசிகள் கிராமங்களை சுரண்டுவதை விட்டு விடட்டும் என்றே சங்கம் கோருகிறது. அதாவது அவர்கள் சுயதேவைப் பூர்த்தியாளர்களாகட்டும். சங்கம் நகரவாசிகளை நூற்கச் சொல்வதின் காரணம் இதுவே. கிராம மக்களை சுயதேவைப் பூர்த்தியாளர்களாக்கி, கிராமங்களிலிருந்து வெளியே போகும் செல்வத்தை தடைசெய்யும் முயற்சியில் சங்கம் ஈடுபட்டிருக்கிறது.

* * *

கேள்வி:- கிராமங்களை முக்கியமாகக் கருதியே தங்கள் கதர் கருத்துக்கள் இருக்கின்றன. பிறகு தாங்கள் ஏன் நகரங்களில் பிரசாரத்திற்கு வருகிறீர்கள்? தாங்களும் நகரத்தையே விரும்புகிறீர்களா?

பதில்:- இரண்டாவது கேள்வியில் இதன் பதில் சிறிது அடங்கியிருக்கிறது. நகரம் கிராமத்தை சுரண்டக் கூடாது என்பதை நகரவாசிகளுக்கு புரியச்செய்வது அஹிம்சைவாதியின் கடமை.

சமூகத்திலிருந்து சுரண்டலை ஒழிக்க விரும்பும் நகரவாசிகள் யாராவது இருந்தால், அவர்களை கிராமங்களுக்கு சென்று இந்த வேலையில் ஈடுபடும்படி சொல்வதும் நமது வேலை. இதற்காகவே நாங்கள் நகரங்களுக்கும் பிரசாரத்திற்கு செல்கிறோம்.

—தீரேந்திர மஜும்தார்.

[10-3-51உ கதாயி மண்டல் பத்திரிகாவிலிருந்து]

★ ★ ★

கதர்மலர் & ஸர்வோதய பிரசுராலயம்.

சர்க்கா சங்கம் கதரையும் நூற்புக் கருவிகளையும் உற்பத்தி செய்து விநியோகித்து வருகிறது. அத்துடன் இவைகளுக்கு ஆதாரமான கருத்துகளையும், கதர்க்கலை, சாஸ்திரம், தத்துவம் முதலியவற்றையும் பரப்புவதற்காக 1946 முதல் முயற்சி செய்து வருகிறது.

கதர் மலர் பத்திரிகை 1947-ல் ஆரம்பித்து இப்பொழுது 3½ வருஷமாகிறது. இந்தக் காலத்தில் சுமார் 90,000 பிரதிகள் அச்சிட்டு சந்தாதாரர்களுக்கும் இதரர்களுக்கும் பெரும் பாகம் விநியோகிக்கப்பட்டன. அத்

கதாயி [நூற்பு] மண்டல். புதிய விதிகள்.

கதாயி (நூற்பு) மண்டலைப் பற்றி முன் ஒரு தனிபிரசுரம் வெளியிட்டோம். அதற்குப் பிறகு மண்டல்கள் அதிகரித்து வருகின்றன. கதாயி மண்டல் இயக்கம் வலுத்து வருகிறது. இதற்காகவே சேவாகிராமத்திலிருந்து கதாயி மண்டல் என்ற ஹிந்தி பத்திரிகையும் வெளிவருகிறது. கதாயி மண்டலைப் பற்றிய கருத்துக்களும் வேலைத் திட்டங்களும் உருவடைந்து வருகின்றன. எதிர்காலத்தில் சுயதேவை வேலையைப் பரப்பும் வேலை கதாயி மண்டல்களைச் சார்ந்தது. கதாயிமண்டலின் நோக்கம் வேலைத்திட்டம் முதலியவைகளைப் பற்றி தனிப் பிரசுரம் சீக்கிரம் வெளியிடப்படும். அதற்குள்ளாக மண்டலின் புதிய விதிகளில் சில முக்கியமானவற்றை கீழே குறிப்பிடுகிறோம். இதன் மூலம் பழைய விதிகள் எல்லாம்ரத்து செய்யப்பட்டன என்று கருதவேண்டும்.

I. 1) மாதம் 7½ சிட்டம் நூல் சுய தேவைக்காக நூற்பவர்களோ, அல்லது சர்க்கா சங்கத்தில் வருஷம் 6 சிட்டம் சந்தா கொடுக்கும் அங்கத்தினர்களோ, குறைந்தது 5 பேர் அங்கத்தினராக சேர்ந்து கதாயிமண்டல் அமைக்கலாம். ஆனால் அவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவராக இருக்கக்கூடாது.

துடன் கதர் மலருக்குத்துணைப் பிரசுரமாக 7 மாதாந்திர புல்லட்டின்களில் சுமார் 30,000 பிரதிகள் வெளியிட்டோம்.

கதர் மலர்—ஸர்வோதய பிரசுராலயம் 1947 முதல் 1951 மார்ச் வரை 48 புஸ்தகங்கள் வெளியிட்டன; அதன் பதிப்புகளின் எண் 69; வெளியிட்ட மொத்த பிரதிகளின் எண் 1,51,000. இவைகளில் பெரும்பாகம் செலவாகி விட்டது.

சர்க்கா சங்கத்திற்கு பிரசுரவேலை முற்றிலும் புதியது. பல கஷ்டங்கள் இருந்தும் சிறுகச் சிறுக பிரசுராலயம் வளர்ந்து வருகிறது. பிரசுரங்களில் பல குறைகள் இருந்தும் அன்பர்கள் ஆதரவு கொடுத்து வருவதற்காக எங்களுடைய நன்றி.

காந்திய, கதர், ஸர்வோதய நூல்கள் தமிழ் நாடெங்கும் பரவ வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் லாப நோக்கமில்லாமல் பார்வைக்கு நன்றாகவும், மற்ற எல்லா புஸ்தகங்களையும் விட குறைந்த விலையிலும் ஸர்வோதய பிரசுரங்களை நாம் விற்று வருவது அன்பர்கள் அறிந்ததே. 1948, 1949, 1950 வருஷங்களில் மட்டும் விற்பனையான பிரசுரத்தின் மதிப்பு சுமார் ரூ. 75,000. தமிழ் நாட்டில் காந்திய நூல்களுக்கு மக்களுக்கு உள்ள ஆர்வமும் தாகமும் வெளிப்படை. துரிதமாக காலத்தை நழுவ விடாமல், அழகாக, மலிவாக காந்திய நூல்கள் லக்ஷக்கணக்கான பிரதிகள் தமிழ் நாட்டில் வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பரவ வேண்டும். இதற்கு சுயநலம் கருதாதவர்கள் 'பைபிள் பிரசாரம்' அல்லது கீதா பிரசார சொஸைட்டிபோல் முன்வர வேண்டுமென்பது எமது பிரார்த்தனை. பிரசுரங்களின் பூரா விபரமும் ஒரு சிறு புத்தகத்தில் காந்திஜி மூங்கில் ராட்டையில் நூற்கும் படத்துடன் பிரசுரித்திருக்கிறோம். வேண்டியவர்கள் 0-2-0 ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

2) மண்டல் அங்கத்தினர்கள் மில் நூல் மில் துணி வியாபாரத்தில் சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாது.

3) சுயதேவை நூற்போர்கள் மட்டும் சர்க்கா சங்கத்திற்கு ஒரு சிட்டம் நூல் வருஷ சந்தா கொடுக்க வேண்டும்.

4) வாரத்தில் குறைந்தது ஒரு முறை சமூக நூற்பும் பொதுவாக காந்திய தத்துவ ஆராய்ச்சி சர்ச்சையும் நடத்த வேண்டும்.

II. வேலைத்திட்டம்:-

1) சுயதேவை நூற்பு, 2) துப்புரவு, 3) கூட்டுறவு வாழ்க்கை, 4) சுயதேவைக்கு வீட்டில் நெசவு, 5) கிராம சுயதேவைப் பூர்த்தி.

III. 1) கதாயி மண்டல் ஒரு காரியதரிசியை நியமித்துக் கொண்டு அவர் சர்க்கா சங்கத்தின் விபாகத்திலுள்ள சஞ்சாலக்கிற்கு 2 ரூபாய் அனுப்பி அங்கீகாரத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். மண்டல் பக்கத்திலுள்ள வஸ்திராலயத்துடன் இணைக்கப்பட்டு வேலை செய்ய அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கப்படும்.

2) மண்டலுக்கு வேண்டிய பருத்தி, பஞ்சு, பட்டைப் பஞ்சு முதலியவை இணைக்கப்பட்ட வஸ்திராலயத்திலிருந்து ரொக்கம் கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

3) நூற்புக் கருவிகளுக்கு ரூபாய்க்கு அரை அணாவும், பிரசுரங்களுக்கு ரூபாய்க்கு 2 அணா விதமும் கமிஷன் கொடுக்கப்படும். தமிழ் 'கதர் மலர்' பத்திரிக்கையும், ஹிந்தி 'கதாயி மண்டல் பத்திரிகா'வும் இலவசமாக அனுப்பப்படும்.

4) சங்கத்தின் நூல் விதிப்படி கதர் விற்பனை செய்யலாம். முனிசிபல் எல்லைக்குள் இருக்கும் கதாயி மண்டலுக்கு வஸ்திராலயத்திலிருந்து வாங்கும் கதருக்கு ரூபாய்க்கு 6 பைசா கமிஷன் கொடுக்கப்படும். முனிசிபல் எல்லைக்கு அப்பாலுள்ள மண்டலுக்கு வாங்கும் கதருக்கு ரூபாய்க்கு 1 அணா கமிஷன் கொடுக்கப்படும். [ஒருதடவையில் 20 ரூபாய்க்கு குறைந்து கதர் கொடுக்கப் படமாட்டாது.]

5) ஜீவனத்திற்காக நூற்போர்களிடமிருந்து நூல் கொள்முதல் செய்ய சர்க்கா சங்கத்தின் விசேஷ அனுமதி பெறவேண்டும்.

6) மாதாந்திர அறிக்கைகளும் கணக்குகளும் விபாகின் காரியாலயத்திற்கு தவறாமல் அனுப்ப வேண்டும். (விபாக் காரியாலயங்களின் விலாசம்:-) 1. திருநெல்வேலி விபாக்: காதி வஸ்திராலயம், கோவில்பட்டி 2. மதுரை—ராமநாதபுரம் விபாக்: காதிவஸ்திராலயம் மதுரை 3. தஞ்சை—திருச்சி விபாக்: கும்பகோணம் 4. சென்னை விபாக்: சென்னை (65, 66 பெரம்புக் கடை) இதர ஜில்லாக்களுக்கு: சர்க்கா சங்கம், காந்திநகர், திருப்பூர்.

[குறிப்பு:— விபரமான விதிகளுடன் கதாயி மண்டல் பிரசுரம் சீக்கிரம் வெளி வரும்.]

ஸர்வோதய மேளாவில் நூல் காணிக்கை.

ஸ்ரீரங்கத்தில் நடந்த ஸர்வோதய மேளாவிற்கு தொழுதூரில் உள்ள சர்க்கா சங்க கிளை மூலம் 215 நபர்கள் ஒவ்வொரு சிட்டம் வீதம் 215 சிட்டம் நூல் காணிக்கை அனுப்பினர்கள். முன்னமே கிடைத்த சிட்டத்துடன் மேளாவில் வந்த நூல் காணிக்கை சிட்டங்களின் மொத்தம் எண் 651.

குறிப்பும் செய்தியும்.

சங்கத்தின் டிரஸ்டிகளின் கூட்டம் ஜனவரி 7, 8-உயில் நடந்தது. அதில் செய்த முக்கிய இரண்டு முடிவுகள் கீழ்க்கண்டவாறு:-

சர்க்கா சங்கத்தின் விபாகங்கள்.

1. சர்க்காசங்கத்தின் சுயதேவைப் பூர்த்தி லக்ஷியத்தை அடைய மாகாணக் கிளைகளின் அமைப்பு அனுகூலமாக இல்லை. சுயதேவை வட்டாரங்களிலும் கதர் அன்பர்களிடமும் அதிக தொடர்பு வைத்துக்கொண்டு சாதகமான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும். சூழ்நிலைக்குத்தகுந்த வாறு விசேஷ வேலைத் திட்டங்களை வட்டாரத் தொண்டர்கள் முழுப் பொறுப்புடன் செய்ய அனுகூலமாக மாகாணங்களை விபாகமாக பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விபாகக் கொள்கையை அனுசரித்து கீழ்க்கண்ட முடிவு செய்யப்பட்டது.

முன்னமே தமிழ் நாட்டில் சென்னை விபாகமும், ஆந்திராவில் தெனுலி, சிகாகோல் விபாகங்களும் ஏற்பட்டன. அதுபோல் மேலும் தமிழ் நாட்டில் 4 விபாகங்களும், ஆந்திராவில் 3 விபாகங்களும், கர்னுடகத்தில் 5 விபாகங்களும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. இது உடனே அமுலுக்கு வரும்.

ஒவ்வொரு மாகாணமும் இனி விபாக மண்டலாக விபாகின் சஞ்சாலகர்களினல் நிர்வகிக்கப்படும். ஒவ்வொரு விபாகமும், கணக்கு, பட்ஜட் முதலிய நிர்வாக விஷயங்களில் பூரண சுதந்திரத்துடன் வேலை செய்து வருவதுடன் சேவாகிராம் சர்க்கா சங்க தலைமைக் காரியாலயத்திற்கு நேராக பொறுப்புள்ளதாக இருக்கும். சஞ்சாலக்கின் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டி அவரவர்களுடைய தனி அனுபவத்தைக் கொண்டு சுய தேவை லக்ஷியத்தை சீக்கிரம் அடையப் புதிய புதிய வேலைத்திட்டம் தயாரித்து வேலை செய்வார்கள்.

ஜீவாதார நூற்பு சம்பளமும் கதர் விலையும்.

2. சர்க்கா சங்கத்தின் அடிப்படையான கொள்கை, ஜீவாதார சம்பளமும், சுயதேவைப் பூர்த்தியும். சுய தேவைக்காக நூற்பது முக்கியம். தேவைக்கு அதிகமாக நூற்போர்களிடமிருந்து நூலை வாங்கும் கொள்கை சர்க்கா சங்கம் அனுஷ்டிக்கும் வரையில் நூற்பதற்கு ஜீவாதாரக் கொள்கைப்படி நியாயமான சம்பளம் கொடுப்பதும் அவசியமாகும். 1936-ல் இருந்த அகவிலை நிலைமையில் தினம் 8 மணி நேரம் நூற்பவருக்கு குறைந்த பட்சம் 3 அணு கூலி கொடுக்கவேண்டுமென்று காந்திஜியின் தலைமையில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்பொழுது நூற்போர்களுக்கு தினம் சுமார் 6 அணு மட்டும் கிடைக்கும். அதாவது இப்பொழுதுள்ள அகவிலையில் தினம் ஒன்றுக்கு சுமார் 1½ அணு. முன்னல் கொடுத்ததை விட இப்பொழுது குறைந்து விட்டது என்பது வெளிப்படை. இப்பொழுதுள்ள அகவிலைப்படி தினம் 0–12–0 ஆவது கொடுத்தால்தான் பழய 3 அணுவுக்கு சமானமாகுமென்பதை ஆச்சார்ய விநோபாஜி சர்வ சேவா சங்கத்தின் மூலம் சென்ற சிலமாதங்களாக வற்புறுத்தி வருகிருர். நூற்பதற்கு தினம் 12 அணு சம்பளம் என்பது நியாயமான போதிலும் நடைமுறையில் எளிதல்ல. ஆகையால் தீர

ஆலோசித்து தினம் ஒன்றுக்கு 8 அணு விற்கு குறையாமல் கொடுக்க வேண்டு மென்று சர்க்கா சங்க டிரஸ்டிகள் தீர் மானித்திருக்கிருர்கள்.

நூற்புசம்பளத்தைஅதிகரிப்பதற்கும் ஒரு எல்லே உண்டு. நூற்போர்களின் கருவிகளே அபிவிருத்தி செய்தும், திற மையை அதிகரித்தும் அவர்களுடைய தின வருமானத்தை அதிகப்படுத்துவது அவசியம். இதற்காக நூற்போர்களும் அதிக முயற்சி செய்தால் சுலபமாக தினம் 12 அணு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக சங்கமும் தீவிரமாக ஆராய்ச்சி செய்து வரும்.

[இதன்படி தமிழ் நாட்டில் ஜனவரி 1-வ முதல் நூலின் சிட்டத்திற்கு விலே 17 நெம்பர் வரை 0-4-3 என்றும் அதற்கு மேற்பட்ட நெம்பர் நூலுக்கு 0-3-9 என்றும் விலே நிர்ணயிக்கப்பட் டது. இதை அனுசரித்து இதுவரையில் கதர் விலேயை ஏற்ருமல் இப்பொழுது தான் 15-3-51 முதல் கதர் விலே ஏற் றப்பட்டிருக்கிறது.]

குறிப்பு:- மற்ற தீர்மானங்களின் விபரம் அடுத்த இதழில் வெளிவரும்.

திருக்கோவிலூர் குஷ்ட நிவாரண கேந்திரம்.

திருக்கோவிலூர் தக்கர்பாபா குஷ்ட நிவாரணசென்டர் 1950 மார்ச் மாதம் திறக்கப்பட்டது. மாதம் சுமார் ஆயிரம் முதல் 2500 வரை வியாதிஸ்தர்கள் சிகிச்சை பெற்று வருகிருர்கள். பக்கத் தில் வீரபாண்டியில் குஷ்ட நிவாரண ஆஸ்பத்திரி நடக்கிறது. அதில் மாதம் சராசரி 500 முதல் 1000 வரையில் வியா தியஸ்தர்கள் வைத்தியம் பெற்று வரு கிருர்கள். கஸ்தூரிபா சென்டரின் டாக்டர் கௌரவ சேவைசெய்து வரு கிருர்.

இந்த குஷ்ட நிவாரணசென்டரின் காரியதரிசி வக்கீல் ஸ்ரீ. T. R. கிருஷ்ண மாச்சாரி கதர் சேவையிலும், ஹரிஜன் சேவையிலும் இவ்வளவு வருஷமாக ஈடு பட்டு வந்ததுபோல குஷ்ட நிவாரணத் துறையிலும் சேவை செய்வது பாராட்டத்தக்கது. அன்பர்கள் ராட் டை வாங்கிக்கொடுத்து உதவி செய்தால் வியாதியஸ்தர்கள் தங்கள் ஆடைக்காக நூற்பதுடன் மன ஆறுதலும் அடை வார்கள்.

சென்னே விபாகத்தில் சர்வோதய தினம்.

சென்னே விபாகத்தில் கீழ்கண்ட இடங்களில் ஸர்வோதயதினம் கொண் டாடப்பட்டது. நூற்பு யக்ஞத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக் கையும் குறிப்பிடுகிருேம்.

காங்கிரஸ்கமிட்டி.	60
விேேபா கதாயிமண்டல், வண்ணுர்பேட்.	60
கஸ்தூரி கதாயிமண்டல், பல்லாவரம்.	50
சிறுவர் உதவிபள்ளி, எழும்பூர்.	30
பாண்டுரங்கசாமி கோவில், சென்னே.	32
வெங்கட்ரமண பள்ளி. பெரம்பூர்.	30
கதாயிமண்டல், புரசவாக்கம்.	45
காங்கிரஸ்கமிட்டி, ஐயனுபுரம்.	20
வள்ளுவர் குருகுலம், தாம்பரம்.	50
விவேகாநந்தாகல்லூரி, மைலாப்பூர்.	15
ஸ்ரீநிவாச காந்திநிலேயம், ஆழ்வார்பேட்	30
ராமகிருஷ்ண பெண்பாடசாலே, G. T.	50
C/O.	472

	B. F. 472
காங்கிரஸ்கமிட்டி, அண்ணுபிள்ளைதெரு.	4
சர்க்கார் மென்டல் ஹாஸ்பிடல், கீழ்பாக்.	45
ராயபுரம் ஏழை பாடசாலை.	30
Govt. Vigilance Home, மைலாப்பூர்.	60
ஔவை விடுதி, அடையார்.	200
காங்கிரஸ் கமிட்டி, புங்கநகர்.	4

வெளிஊர்கள்.

திருமணி கதாயிமண்டல்.	300
காந்தி கூட்டுறவுசங்கம், அரக்கோணம்.	32
காதி வஸ்திராலயம், காஞ்சிபுரம்.	50
மொத்தம்	1197

கதர் அன்பர்கள் மகாநாடு.

சிதம்பரம் பக்கத்தில் உள்ள கீழ மூங்கிலடி, காந்தி ஆசிரமத்தில் 26—3—'51-ல கதர் அன்பர்கள் மகாநாடு நடந்தது. அதற்குத் தலைவர் ஸ்ரீ O. P. ராமசாமி ரெட்டியார் அவர்கள்; ஸ்ரீ திரேந்திர மஜூம்தார் திறந்து வைப்பவர்.

பெண்கள் பயிற்சி முகாம்.

வேதாரண்யத்தில் சர்தார் வேதரத்னம் அவர்களின் முயற்சியால் பெண்களுக்கு நிர்மாணவேலையில் மூன்று மாதப் பயிற்சி முகாம் ஜனவரி-மீ ஆரம்பமாயிற்று. மார்ச்சு-மீ இறுதியில் முடிவடையும். நிர்மாணவேலையில் ஈடுபட்டுள்ள பல நண்பர்கள் முகாமில் வகுப்புகள் நடத்துகிறுர்கள்.

விற்பனை ஏஜன்சி.

இனிக் கதர் விற்பனை ஏஜன்சி தனிப்பட்ட நபர்களுக்கு கொடுப்பதை நிறுத்த வேண்டுமென்றும், கதாயி மண்டல்களுக்கு மட்டுமே ஏஜன்சி கொடுக்க வேண்டுமென்றும் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தியின் தலைமையில் நடந்த சென்ற சஞ்சாலக் கூட்டத்தில் முடிவுசெய்யப் பட்டது. அதன்படி இப்பொழுது கதர் விற்பனை செய்துவரும் தனிப்பட்ட ஏஜண்டுகள் உடனே கதாயிமண்டலை அமைத்தால் மண்டலின் பேரில் ஏஜன்சி கொடுக்கப்படும்.

மதுரை உபகரண மகாநாடு.

மதுரையில் 1950 நவம்பர் 18, 19, 20-உ களில் நடந்த அகில இந்திய கதர் உபகரண நான்காவது மகாநாட்டின் வரவு செலவுகளை வரவேற்புக்கமிட்டி வெளியிட்டிருக்கிறுர்கள்.

அதில் கண்ட விபரங்கள் பின் வருமாறு:-

நன்கொடை :-

தமிழ் நாட்டில் பல இடங்களிலிருந்து வசூலானது நிகர் ரூ. 7,852—6—6

செலவுகள் :-

சாப்பாடு	2806-13—6
பந்தல், அலங்காரம்	259—5—6
வண்டி வாடகை	409—9—9
விளம்பரம்	302-15—0
பிரயாணம்	214—9—0
பொருட்காட்சி	373—5—9
தபால், விளக்கு, அச்சுக்கூலி, வாடகை, சில்லரைச் செலவு, மருந்து முதலியவை	727—0-11
	5,093-11—5
செலவு போக பாக்கி ரொக்கம்.	2,758-11—1

திருப்பூரில்
ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி,

திருப்பூர், காந்தி நகரில் பிப்ரவரி 25, 26-உ களில் தமிழ் நாட்டு சர்க்கா சங்க விபாக 'சஞ்சாலக்' களும் இதர சில ஊழியர்களும் கூடினார்கள். ஸ்ரீ கிருஷ்ணதாஸ்காந்தி தலைமை வகித்து பேசியதின் சாரம் பின் வருமாறு:-

சர்க்கா சங்கம் இது வரையிலும் வியாபார கதரிலேயே ஈடுபட்டிருந்தது. கிராம வாசிகளுக்கு தீவிரமாக சேவை செய்ய நமக்கு போதுமான தொடர்பு இல்லை. வஸ்திராலயங்களிலேயே நாம் உட்கார்ந்து விட்டோம். ஏதோ ஏழைகளுக்கு கால் வயிற்றுக் கஞ்சிக்கு நூற்பது மூலம் கிடைக்கிறது என்ற ஒரு பிரமையில் இருந்துவிட்டோம். ஆனால் காந்திஜி சுதந்திர இந்தியாவில் இந்த ஏழ்மையை நீடித்து பஞ்ச நிவாரண வேலையைச் செய்வதற்கு சங்கத்தை ஆரம்பிக்கவில்லை. இந்த வறுமைக்கும் ஏழ்மைக்கும் காரணமாக இருக்கும் பொருளாதார முறையை மாற்றப் புரட்சி செய்ய வேண்டுமென்பதே அவருடைய விருப்பம். அந்நியர் ஆட்சி செய்தபொழுது இம்மாதிரி நிவாரண வேலையை தர்ம ஸ்தாபனங்கள் செய்ய அவசியம் இருந்தது. சுதந்திர இந்தியாவில் பஞ்ச நிவாரண வேலையைச் செய்வது சர்க்காரின் கடமையாகும். கிராம மக்கள் தங்களுடைய உழைப்பினாலும் சக்தியினாலும் பிறர் உதவியின்றி தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதற்கு சாதனம் ராட்டையும் கதரும். கிராமத்தின் சுயதேவைப் பூர்த்தி என்பது துணி சம்பந்தம் மட்டுமல்ல. வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் சுயதேவைப் பூர்த்தி ஏற்படுத்துவதே கதரின் லக்ஷியம். இதன்மூலம் தான் கிராம மக்கள் உண்மையான ஸ்வராஜ்யத்தை அனுபவிக்க முடியும். இதைச் செய்வதே சங்கத்தின் முக்கிய வேலை. இதற்காக சென்ற 5 வருஷங்களாக பல முயற்சிகள் செய்துவருகிறோம். தீவிரமாக மக்களிடை சுயதேவைத் தத்துவத்தை பரப்புவதற்கு சங்கத்தின் மாகாணக் கிளையை விபாகங்களாக மாற்றி அமைப்பது அவசியமாகிவிட்டது. புதிய விபாகத்திலுள்ள ஒவ்வொரு தொண்டரும் கதர் சுயதேவையைப் பரப்புவதற்கு புத்த பிக்ஷுக்களைப் போல கதர் பிக்ஷுக்களாக மாற வேண்டும். காந்திஜி நவகாளி போவதற்கு முன் சொன்னதாவது :-

"ராட்டைக்கு எதிரிடையாக பலவித எதிர்ப்பு ஏற்பட்டு வருகிறது, இப்பொழுது தேசத்தின் பிளவினால் ஏற்பட்ட நிலைமையில் என் கைகள் கட்டுண்டு கிடக்கின்றன. இல்லாவிட்டால் ராட்டையின் உண்மையான தத்துவத்தை விளக்க ஒவ்வொரு மாகாணமாக

முன் பக்கத் தொடர்ச்சி.

ஸ்ரீ தீரேந்திர மஜும்தாரின் தமிழ்நாட்டு சுற்றுப் பிரயாணம்.

மார்சு 8உ திருப்பூர். மாலை கொடுவாய். 9உ மூலனூர். 10உ கொடுமுடி. 11உ ஈரோடு, பவானி. 12உ கோபி, கூகலூர். 13உ ஊட்டி. 14உ பெரிய நாயக்கன்பாளையம், கோவை. 15உ திண்டுக்கல். 16உ மதுரை. 17உ திருநெல்வேலி. 18உ தூத்துக்குடி. 19உ கோவில்பட்டி, சங்கரன்கோவில். 20உ ஸ்ரீவில்லிபுத்தூர். 21உ திருச்சி. 22உ காரைக்குடி. 23உ கும்பகோணம். 24உ மன்னார்குடி. 25உ மாயவரம். 26உ சிதம்பரம். 27உ திருவண்ணாமலை. 28உ வேலூர். 29உ ஆற்காடு. 30உ செங்கல்பட்டு. 31உ சென்னை.

யாத்திரை செய்வேன். சர்க்கா சங்கம் சுயதேவைக்காக தன்னல் இயன்றதை செய்யட்டும். நவகாளியிலிருந்து ஒரு வேளை திரும்பலாம், திரும்பி வராமலு மிருக்கலாம்"

இப்பொழுது காந்திஜி நம்மிடத்தில் இல்லை. ஆதலால் சங்கத் தொண்டர்களுக்கு அதிக பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. காந்திஜி கூறியபடி கதர் தத்துவத்தில் தொண்டர்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். அதில் உண்மையான நம்பிக்கையுடன் நாம் சேவை செய்தால் கதரின் தத்துவம் அதில் உள்ள சத்தியத்தின் சக்தியினல் மக்களிடை பரவும்.

இன்று கிராமத்தை ஆள்வது யந்திர சாலைகளும் பணமும்தான். கிராமத்தின் மூலப்பொருள்களும் செல்வமும் நகரத்திற்கு போய்விடுகிறது. கிராமத்திற்கு தேவை இல்லாத சாமான்களை நகரங்கள் விற்பதால் மேலும் கிராமம் சுரண்டப்படுகிறது. இம்மாதிரி கிராமங்களின் சுரண்டலை எப்படி நிறுத்துவது என்பதுதான் ராட்டையின் பிரச்னை. ஆச்சார்யா கிருபாலனி "நகரத்திலுள்ளகருப்பு கள்ளமார்க்கெட்காரர்களை மறைப்பதற்கு வெள்ளைக்கதர் உற்பத்தி செய்கிறீர்களா" என்று பரிகாசமாகச் சொன்னர். இதுவும் உண்மையில் சிந்திக்கத்தகுந்ததே. நூற்காத நகரவாசிகளுக்கு கதர்விற்கும் மோகத்திலிருந்து நாம் தப்பவேண்டும். இதற்கு சுயதேவைப் பிரசாரம் ஒன்று தான் வழி. நமது வஸ்திராலயத்தை தினம் பாதிநாள் மூடிவிட்டு தொண்டர்கள் தெருத்தெருவாகவும் கிராமம் கிராமமாகவும் போய் பிரசாரம் செய்தால் தான் காந்திஜி எண்ணிய அஹிம்சா சமூக பொருளாதாரப் புரட்சியைத் தொடங்கமுடியும்.

விபாகங்களின் லக்ஷியம், வேலைத் திட்டம், தலைமைக் காரியாலயத்தின் சம்பந்தம், விபாக் மண்டலின் நிர்வாகம், கதாயி மண்டலின் வேலைத்திட்டம், சுயதேவைப் பிரசாரத்திற்கு வேலை முறை முதலிய விஷயங்களைப் பற்றி 2 தினம் சர்ச்சை நடந்தது. ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி எல்லா விஷயங்களையும் சர்க்கா சங்கத்தின் கொள்கையையும் தீர்மானத்தையும் விளக்கினர்.

கேரளா சர்க்கா சங்கத்தில் விபாகங்கள் ஏற்படுத்துவது சம்பந்தமாக மார்ச் 1, 2-வ களில் கிருஷ்ணதாஸ் காந்தி தலைமையில் பாலக்காட்டில் ஊழியர்களின் கூட்டம் நடந்தது. கேரளத்தை வடக்கு கேரளா, மத்திய கேரளா, தெற்கு கேரளா என 3 விபாகங்களாகப் பிரிக்க தீர்மானிக்கப் பட்டது. டிரஸ்டிகளின் அங்கீகாரம் பெற்று ஏப்ரல்-மீ முதல் அமுலுக்குவரும்.

கல்லுப்பட்டியில் கிராம முன்னேற்றம்.

ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு

[சென்ற 1950 நவம்பர் மாதம் ஸ்ரீ ஜாஜுஜி மதுரை மகாநாட்டிற்கு வந்தபொழுது கல்லுப்பட்டியிலுள்ள காந்தி நிகேதனத்திற்கு விஜயம் செய்தார். தமிழ் நாட்டில் தீவிரமாக நிர்மாண வேலை நடக்கும் சில ஸ்தலங்களில் கல்லுப்பட்டியிலுள்ள காந்திநிகேதன் ஒன்றாகும். அங்கு தோல் - கொம்பு சாமான் முதலிய குடிசைத் தொழில், பால் பண்ணை, ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி, கிராம சேவை போன்ற பல வேலைகள் சில வருஷங்களாக நடந்து வருகின்றன. அத்துடன் சர்க்காரின் பிர்க்கா

திட்டமும் தீவிரமாக நடைபெறுகிறது. அப்பக்கரை என்ற கிராமத்தில் கிராம அபிவிருத்தி வேலையைப்பற்றி திருமங்கலம் பிர்க்கா அதிகாரி ஸ்ரீ ஜாஜூஜிக்கு ஒரு அறிக்கை கொடுத்தார். அந்த அறிக்கை ஆங்கில ஹரிஜனில் 24–2–51ல் வெளிவந்தது. அதன் சாரத்தை கீழே தருகிறோம்—ப. ர்]

1. அப்பக்கரை கிராமத்தின் ஜனத்தொகை 800; வீடுகள் 150; கிராம சேவா சங்கத்தின் மூலமாக ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் கல்லினால் சாக்கடை கட்டியிருக்கிறார்கள். பணமில்லா ஏழைகளைத் தவிர ஒவ்வொரு வீட்டிற்கு முன் ஓடும் சாக்கடை அளவிற்கு ஒவ்வொரு வீட்டுக்காரரும் பணம் கொடுத்தார். ஒரு அடி நீளத்திற்கு வீட்டுக்காரர்களுக்கு ரூ $2\frac{3}{4}$ செலவு ஆயிற்று. வீட்டுக்காரர் செலவில் 2700 அடியும், பொதுச் செலவில் 930 அடியும் சாக்கடை கட்டப்பட்டது. சாக்கடைத் தண்ணீர் இரண்டு பெரிய கல் தொட்டியில் விழுகின்றது. அது உரமாக்கப்பட்டு அதற்கு கிடைக்கும் விலை பொதுப் பணத்துடன் சேருகிறது. இந்த எரு தான்யத்திற்கும் காய்கறிக்கும் மிகவும் உபயோகமானது. சாக்கடையின் செலவு மொத்தம் 4500 ரூபாய்; சர்க்காருக்குச் செலவு 500ரூ. தான்.

சாக்கடை கட்ட சர்க்கார் அதிகாரிகளின் ஆலோசனையும் கிடைத்தது. கிராமத்தில் சுகாதாரத் தொண்டர்கள் ஜனங்களுடைய உதவியுடன் வாரம் ஒரு முறை சாக்கடையை சுத்தம் செய்கிறார்கள். காலையில் துப்புரவும், மாலையில் பிரார்த்தனையும் பஜனையும் செய்கிறார்கள். கிராம பஜனைச் சங்கம் நல்ல வேலை செய்கிறது.

2. கிராமத்தார்களுக்கு வயலில் வண்டி போவதற்கு ரோடு போடுவதற்கும் மேடுபள்ளங்களை சமமாக்குவதற்கும் தங்கள் செலவிலேயே சமாளித்துக் கொள்கிறார்கள். வண்டி உள்ளவர்கள் வாரம் ஒரு முறை தங்கள் வண்டியை ரோடு போட இலவசமாகக் கொடுக்கிறார்கள். மற்றவர்கள் வாரம் ஒரு தினம் இலவசமாக உழைக்கிறார்கள்.

3. ஜில்லா போர்டின் ஆரம்ப பாடசாலையை ஆதாரக்கல்விப் பள்ளியாக மாற்றுவதற்கு கிராமவாசிகள் இரண்டு ஏக்ரா இலவசமாக நிலமும், கட்டடத்திற்கு 2000 ரூபாய் நிதியும் கொடுத்திருக்கிறார்கள்.

4. கிராமவாசிகளுக்கு நூற்பதிலும் சிரத்தையிருக்கிறது. ஸ்திரீகளும் குழந்தைகளும் 70 ராட்டையில் நூற்கிறார்கள். நெசவும் சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்.

5. பஞ்சாயத்துப் போர்டும் பலவகை உதவி தரும் கூட்டுறவு சங்கமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

6. இராப் பள்ளிக்கூடம் முதியோர்களுக்காக நடக்கிறது.

7. மருத்துவசாலைக்காக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

8. இந்த பிர்க்காவில் ஹரிஜன் முன்னேற்ற வேலை தீவிரமாக நடக்கும் சில கிராமங்களில் இது ஒன்று.

9. வர்தா கக்கூஸுகள் இக்கிராமத்தில் உபயோகப்படுகின்றன.

10. இவைகளைத் தவிர கிராமத்தில் பொது அறிவுக்கும் கலைக்கும் வாசக சாலையும் ரேடியோவும் இருக்கின்றன.

127776.

Edited and Published by N. Ramaswami for All India Spinners' Association, (Tamil Nad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

வினேபாஜியின் ஸர்வோதய யாத்திரை.

வினேபாஜி சென்ற சிலகாலமாக பவ்னரில் பரந்தாம் ஆசிரமத்தில் ஒரு பெரிய சோதனை நடத்தி வருகிறர். கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த பொழுதும் வைத்திய சிகிச்சை இல்லாமல் ராமநாமத்தைக் கொண்டே உடல் வியாதியை தீர்த்துக்கொண்டார். அத்துடன் பணத்திலிருந்து தப்பி சரீர உழைப்பின் மூலமாகவே சமாஜத்தின் வாழ்க்கையை நடத்தும் பெரிய சோதனையில் இறங்கியுள்ளார். ஆசிரம நிலத்தில் மாடும் கலப்பையும் கொண்டு உழாமல் கையால் மண்வெட்டியினல் கொத்தி விவசாயம் செய்யப்படுகிறது. கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கும் மாடு உபயோகப்படுத்துவதில்லை. வினேபாஜியும் சிஷ்யர்களும் சரீர உழைப்பினல் தண்ணீர் இறைத்து நிலத்திற்கு பாய்ச்சுகிறர்கள். வினேபாஜி தினம் சுமார் 6 மணிநேரம் நிலத்தில் உழைக்கிறர்.

வினேபாஜி சென்ற அங்கூல் ஸர்வோதய சம்மேளனத்திற்குப் போகவில்லை. அகில இந்திய சர்வ சேவா சங்கத்தின் கூட்டம் சேவாகிராமத்தில் மார்ச்சு 6-வ நடந்தபொழுது ஒரு நண்பர் வினேபாஜியிடத்தில் ஸர்வோதய சம்மேளனத்திற்கு வர எண்ணமுண்டா என்று கேட்டார். அதற்கு வினேபாஜி உறுதியாக முடியாது என்று சொன்னர். ஆனல் தெய்வசங்கல்பம் வேறுக இருந்தது போலும்!

"ஸர்வோதய ஸமாஜமும் ஸம்மேளனமும் தங்களுடைய யோசனையினல் ஏற்பட்டவை. வெகுதூரத்திலிருந்து பல ஸர்வோதய ஊழியர்கள் வருகிறர்கள். அவர்களுக்கு ஒருவழியும், ஒளியும் தெரியாமல் ஏமாந்து திரும்ப வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் தாங்கள் வராமல் இருப்பது எப்படி சாத்தியம்? இல்லாவிட்டால் சம்மேளனத்தை மூடிவிடுவது உசிதம்" என்று அதே நண்பர் மீண்டும் வற்புறுத்திக்கூறினர். வினேபாஜியின் உள்ளத்தில் என்ன தோன்றியதோ தெரியவில்லை. சிறிது மௌனமாக இருந்து 'சரி நான் வருகிறேன்' என்று எல்லோருடைய மனமும் உற்சாகப் படும்படி உறுதியாகச் சொன்னர். ஆனல் அவர் கால் நடையாகப்போவது அப்பொழுது ஒருவருக்கும் தெரியாது.

அன்று மாலை ஆசிரமப் பிரார்த்தனைக்குப்பின் ஹைதராபாத்திற்கு நடந்து யாத்திரை செய்யப்போவதாகச் சொன்னர். "ரயிலையோ, மற்ற வாகனத்தையோ உபயோகப்படுத்தக்கூடாது என்ற ஒரு விரதமும் நான் எடுத்துக் கொள்ளவில்லை. காலையில் நான் பிரார்த்தனையில் சொன்னது போல ரயில் முதலிய வாகனங்களை உபயோகிக்கக் கூடாது என்ற கருத்துமில்லை. எனினும் நான் கால்நடையாகவே யாத்திரை செய்ய முடிவு செய்துள்ளேன். ஏனெனில் நான் ஈடுபட்டிருக்கும் சோதனையில் நிச்சயமாக ஒளி கிடைக்கும் வரையில் அதை விட்டு விட்டுச் செல்ல என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆகையால் வாகனங்களில் செல்லும்படி என்னைத் தூண்டுவதற்கு எனது நண்பர்கள் முயற்சி செய்யாமல் கால்நடை எவ்வளவு சுலபமாக இருக்குமென்பதை கருதட்டும். கடவுளின் ஆக்ஞைக் கிணங்க, ஸர்வோதய சம்மேளனத்திற்கு செல்ல தீர்மானித்திருக்கிறேன்" என்று வினேபாஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் சொன்னர்.

(முன்பக்கத்தின் தொடர்ச்சி)

ஹைதராபாத் வர்தாவிலிருந்து சுமார் 300 மைல் இருக்கும். தினம் சுமார் 10, 12 மைல் வீதம் நடந்து எப்ரல் 6, 7-உ சிவராம்பள்ளி போய்ச் சேருவார்.

இது கிராம ஸ்வராஜ்யத்திற்காக ஏற்பட்ட யாத்திரைபோல்தான் தோன்றுகிறது. கிராமங்களில் எவ்வளவு மக்களுக்கு ஸர்வோதய லக்ஷியத்தின் புதிய சக்தியும் ஊக்கமும் கிடைக்கும்! சிவராம் பள்ளியில் நடக்கும் சம்மேளனத்தில் விநோபாஜியிடமிருந்து தெளிவான வேலைத்திட்டம் கிடைக்கும். முன் வருஷங்களில் விவாதத்துடன் சம்மேளனம் முடிந்தது. உறுதியான மார்க்கம் தெளிவாகத் தென்படவில்லை. ஆனால் இந்த சம்மேளனத்தில் ஸர்வோதய ஊழியர்களுக்கு ஒரு புதிய சக்தியும் மார்க்கமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடும்.

சுயதேவைக் கதர் உற்பத்தி.

தமிழ்நாட்டில் சுயதேவைக்கு நூற்பவர்களின் எண் அதிகரித்து வருகிறது. சிலர் தங்கள் நூலை காதி வஸ்திராலயத்தில் கொடுத்து வேண்டிய ரகத்தை நெய்துகொள்ளுகிருர்கள். பலர் நூலைக்கொடுத்து அதற்கு சமானமாக உடனே கதராகவும் மாற்றிக்கொள்கிருர்கள். 1950 ஜூலை-மீ முதல் டிசம்பர் முடிய 6 மாதத்தில் இம்மாதிரி நெய்தும், மாற்றிக் கொண்டதுமான சிட்டமும் சதுரகெஜமும் ஜில்லாவாரியாக கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:-

ஜில்லா.	சிட்டம் எண்.	சதுரகெஜம் எண்.
கோவை	55,754	13,931
நீலகிரி	1,049	262
மதுரை	37,053	9,258
ராமனதபுரம்	67,015	16,752
திருநெல்வேலி	18,429	4,611
திருச்சி	11,397	2,846
தஞ்சாவூர்	15,949	3,982
தென் ஆற்காடு	18,124	4,5[illegible]
வட ஆற்காடு	6,407	1,600
செங்கல்பட்டு	959	[illegible]40
சென்னை	22,024	5,506
சேலம்	1,116	2[illegible]
ஏஜன்சிகள்	1,562	3[illegible]
மொத்தம்....	2,56,838	64[illegible]

ஸ்ரீ மஜூம்தார் எழுதிய புத்தகங்கள்.

சுதந்திர இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களிலிருந்து எப்படித்தப்புவது? சுதந்திர இந்தியாவின் பிரச்னை என்ன? கிராமவாசிகளின் பொருளாதார விடுதலைக்கு என்ன வழி? காந்திஜியின் அஹிம்சா புரட்சிமூலம் தீர்க்க முடியுமா? அதில் ராட்டை - கதர் மூலம் காந்தீயப்புரட்சியை எப்படி ஏற்படுத்துவது? இவைகளைப்பற்றி ஸ்ரீ தீரேந்திரமஜூம்தார் மார்ச்சு மாதம் 8-உ முதல் 31-உ வரை பல இடங்களில் பிரசாரம் செய்து வந்தார். அவருடைய புரட்சிக் கருத்தை ஆயிரக்கண[illegible] அன்பர்கள் கேட்டிருப்பார்கள்[illegible] டதை நன்ருக சிந்தனை செய்[illegible] அவர் எழுதிய கீழ்க்கண்ட புஸ்த[illegible] உதவியாக இருக்கும்.

1) ஸ்வராஜ்யமும் சர்க்காவும் 0-[illegible]
2) ராட்டைப்புரட்சி. 0-[illegible]
3) Demand of the Times [English] [illegible]
4) Revolutionary Charkha 0-[illegible]

கிராம பஞ்சாயத்து.

உண்மையான கிராமத்தில் ஐந்து நபர்களைக்கொண்டதல்ல; ஐந்து குணங்களைக்கொண்ட பஞ்சாயத்து இருக்கவேண்டும். அவைகளாவன:-

1. அன்பு பாவம். 2. பயமின்மை. 3. கைத்தொழில். 4. சுத்தம் 5. கல்வி.

இந்த ஐந்திலும் அடங்காதது வேறு என்ன இருக்கிறது? கிராம ராஜ்யமும் ராமராஜ்யமும் இவைகளிலிருந்தேதான் ஏற்படும்.

—விநோபா.